# ஐக்கிய அரசு

மலர் 1.　　　　இதழ் 5

மே　　　　1934.

JL
V1m N34Ik
N34.1.5
148729.

# ஐக்கிய அரசு

(CO-OPERATIVE COMMONWEALTH)

STANDS FOR

BETTER FARMING, BETTER BUSINESS, BETTER LIVING.

1934 மே திருச்சி


10 OCT 1934

# அரிசி வியாபாரம்

## ஏற்றுமதி இறக்குமதி விபரம்

1. இந்திய அரிசியின் வெளிநாட்டு ஏற்றுமதி விபரம்.
2. இலங்கை, மலாய், கிரேட் பிரிட்டன் முதலிய நாடுகளுக்கு இந்திய அரிசி ஏற்றுமதி விபரம்.
3. ஜெர்மனிக்கு இந்திய அரிசி ஏற்றுமதி விபரம்.
4. இந்தியாவில் சையாம், இந்து—சைனா அரிசி இறக்குமதி விபரம்.

ஏற்றுமதி

| 1. நாடுகள் | 1929—30 | 30—31 | 31—32 | 32—33 | அளவு. |
|---|---|---|---|---|---|
| பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளுக்கு ஏற்றுமதி | 820 | 884 | 810 | 861 | ஆயிரம் டன்கள் |
| ஏனைய அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி | 1478 | 1370 | 1471 | 967 | ,, |

ஏற்றுமதி

| 2. நாடுகள் | 1927—28 | 28—29 | 29—30 | தொகை. |
|---|---|---|---|---|
| இலங்கை | 7,82,36,000 | 7,05,58,000 | 6,61,92,000 | ரூபாய்கள் |
| மலாய் | 2,73,62,000 | 2,34,49,000 | 3,03,69,000 | ,, |
| கிரேட் பிரிட்டன் | 72,5,000 | 849,56,00 | 50,11,000 | ,, |

ஏற்றுமதி

| 3. வருஷம் | டன்கள் |
|---|---|
| 1931 | 234,214 |
| 1932 | 206,651 |
| 1933 | 164,784 |

இறக்குமதி

| 4. வருஷம் | டன்கள் |
|---|---|
| 1931 | 16,500 |
| 1932 | 31,200 |
| 1933 | 45,000 |

இந்தியா இதுவரை கண்டிராத பெருந்ததோர் நெருக்கடியை இதுகாலை சமாளிக்க வேண்டிய நிலையில் இருக்கிறது. அரிசியும் கோதுமையும் இந்நாட்டின் பிரதான உணவுப்பொருள்களாகவும் உற்பத்திப் பொருள்களாகவும் இருக்கின்றன. இவ்விரண்டில் சுமார் 820 லெட்சம் ஏக்கர் விஸ்தீரணமுள்ள நிலம் அரிசி உற்பத்திக்கென ஒதுக்கப்பட்டிருக்கிறது. மேலும், உலகத்தின் பல பாகங்களுக்கும் அனுப்பப்படும் அரிசியில் 100-க்கு 40 வீதம் இந்திய அரிசி எனத் தெரிகிறது. அறுங்கக்கூறின் அரிசியானது ஆண்டி முதலாக அரசன் ஈராக சகலருக்கும் இன்றியமையாத உணவுப்பொருளாக இருப்பதால் அதனை உற்பத்தி செய்யும் தொழிலில் பல லெட்சக்கணக்கான குடும்பத்தினர் ஈடுபட்டிருக்கின்றனர். துரதிருஷ்டவசமாக அரிசி உற்பத்தி புரிவோருக்குள் ஒற்றுமை என்பது கிடையாது; கூட்டுறவு முறையில் உற்பத்தி செய்து, விற்பனை புரிந்து, செலவைக் குறைத்து, வருமானத்தைப் பெருக்கிக்கொள்ளும் வழியை இவர்கள் கைக்கொண்டார்களில்லை. சென்ற சில ஆண்டுகளில் நெல்லின் விலை மிகவும் குறைந்து விட்டது. மூட்டை ஒன்று ரூ. 7 ஆக இருந்தது ரூ 2½க்கு வந்துவிட்டது. இம்மாதிரியான நெல் விலையின் குறைவும், உற்பத்திக்கேற்படும் அதிகச் செலவும், விற்பனைக்கென நேரும் வீண் செலவும், வரியின் சுமையும் சேர்ந்து விவசாயிகளை வாட்டுகின்றது. இது ஓர் புறமிருக்க இத்தேசத்தில் வெளிநாட்டு அரிசி இறக்குமதியாவதும், இத்தேசத்து அரிசி ஏற்றுமதியைப் பிற நாட்டினர் காப்பு வரியின் மூலம் தடுப்பதும், பொருளாதார நெருக்கடியும் சேர்ந்து கிருஷிகளை என் செய்வதென வகை தெரியாது ஏங்கச் செய்து விட்டது. 1929-ம் ஆண்டில் அரிசியின் விலையில் இறக்கம் ஏற்படத்தலைப்பட்டது. 1931-ம் ஆண்டிலே 100-க்கு 40 விகிதம் விலை குறையலாயிற்று. ஆனால், தற்போது மிகமிகக் குறைவென்றே கூறவேண்டும். இந்நாட்டிலிருந்து வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள அரிசி எவ்வளவு தூரம் குறைந்திருக்கின்றதென்பதைக் கவனித்தால் உண்மை விளங்கும்.

148729.

உலகெங்குமுள்ள சுமார் 40 நாடுகளுக்கு இந்திய அரிசி ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவற்றில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலுள்ள நாடுகளில் இலங்கை, மலாய், கிரேட் பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கும், ஏனைய நாடுகளில் ஜெர்மனிக்கும் இந்திய அரிசி ஏராளமாக அனுப்பப்படுகிறது. கிரேட்பிரிட்டனில் இறக்குமதியாகும் அரிசியில் மூன்றில் ஓர் பாகம் இந்திய அரிசி எனலாம். கிரேட்பிரிட்டனில் இந்திய அரிசிக்குப் போட்டியாக இருப்பது ஸ்பெயின் அரிசியாகும். இந்திய அரிசிக்கு விசேஷ சலுகை காட்டப்படுமாகில் இந்நாட்டின் அரிசியை ஏராளமாக கிரேட்பிரிட்டன் ஏற்கலாம். நிற்க. இந்திய அரிசி இலங்கை, மலாய் முதலிய நாடுகளுக்கு ஏராளமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வந்தது. ஆனால், இந்நாடுகளிலும் போட்டி ஏற்பட்டு விட்டது. சையாம், இந்து-சைனா முதலிய நாடுகளிலிருந்து அரிசி இறக்குமதியும், ஜப்பானியக்கப்பல்களின் கட்டணக் குறைவின் காரணமாக அந்நாட்டு அரிசியின் சரசமான விலையும், இந்திய அரிசியைப் படுக்க வைத்து விட்டது. மலாய் நாட்டில் இந்திய அரிசிக்கு காப்பு வரி இல்லை; இலங்கையிலோ அந்தர் ஒன்றுக்கு ஒரு ரூபாய் விகிதம் வரி விதிக்கப்படுகிறது; எனினும் இந்திய அரிசிக்கென பிரத்தியேக சலுகை காட்டப்பட்டாலன்றி, இந்நாட்டு அரிசி இவ்விரு நாடுகளிலும் எடுபடாது. பிற நாடுகளின் போட்டியும், போக்கு வரத்து



வசதியின்மையும், பிரத்தியேக சலுகை காட்டப்படாமையும் காரணமாக பொதுவாக கிரேட்பிரிட்டனிலும், குறிப்பாக மலாய் நாட்டிலும், சிறப்பாக இலங்கையிலும் இந்திய அரிசியின் தேவை குறைந்திருப்பதை அறிந்தும் ஒட்டவா வீரர்கள் அக்கறை காட்டாதது வருந்தத்தக்கது. மேலும், ஜெர்மனியிலோ இந்திய அரிசி காப்பு வரி மூலம் தடுக்கப்படுகிறது. இதற்குக் காரணம் ஜெர்மன் தேசத்து உற்பத்திப் பொருள்களுக்கு வெளி நாடுகளில் தேவை இல்லாமை என்றும், ஜெர்மன் தேசத்தினர் தம் நாட்டு விளைபொருள்களையே விரும்புகின்றனரென்றும் தெரிகிறது.

இம்மாதிரியாக இந்திய அரிசியின் ஏற்றுமதி பாதிக்கப்பட்டிருக்கையில் இந்நாட்டிலேயே சையாம், இந்து-சைனா முதலிய நாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி செய்யப்படுவது விந்தையிலும் விந்தையே. வெளிநாட்டு அரிசியின் இறக்குமதி நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே வருகிறது. 1933-ம் ௵ டிசம்பரில் 25,900 டன் அரிசியும், 1934-ம் ௵ ஜனவரியில் 20,000 டன்னும், பிப்ரவரியில் 14,000 டன்னும் சையாமிலும், இந்து-சைனாவிலுமிருந்து இறக்குமதியாகி இருக்கிறது. இந்தியாவிற்கு வெளி நாட்டு அரிசி ஒரு மணிகூட தேவை இல்லாதிருந்தும் இவ்வாறு இறக்குமதியாவது இந்நாட்டைப்பாழ்படுத்துவதேயாகும். இதுகாலை சர்க்கார் கடமை என்ன? ஒட்டவா ஒப்பந்தத்தைத் திருத்த வேண்டும்; கிரேட்பிரிட்டனிலும் மலாய், இலங்கை முதலிய நாடுகளிலும் இந்திய அரிசிக்கு விசேஷ சலுகை காட்ட வேண்டும்; சையாம், இந்து-சைனா அரிசிக்குக் காப்பு வரி விதிக்க வேண்டும்; நில வரியைக் குறைக்க வேண்டும்; ரயில்வே கட்டணத்தைப் பாதியாக்க வேண்டும்; போக்குவரத்து வசதியை உண்டாக்க வேண்டும்; கூட்டுறவு விற்பனை முறையை ஏற்படுத்த வேண்டும்; இந்திய அரிசிக்கென பிற நாடுகளில் பிரசாரம் செய்ய வேண்டும். சர்க்கார் கவனஞ்செலுத்துவார்களா?

## பட்டாதாரிகள் திண்டாட்டம்.

வேலை இல்லாத் திண்டாட்டம் நாட்டில் நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறது. அதிலும், சர்வ கலாசாலை, சட்ட கலாசாலைப் பட்டாதாரிகள் வேலை இல்லாமை காரணமாகப் படும்பாடோ சொல்லத்தரமன்று. இதுகாரணமாக பொதுவாக உலகெங்கும், குறிப்பாக இந்நாட்டிலும் நெருக்கடியான நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்நெருக்கடியை சமாளிக்க அரசியல் வாதிகளோ அல்லது பொருளாதார நிபுணர்களோ தக்கதோர் வழிகாண இயலாது திகைக்கின்றனர். இதுகாலை உலகெங்கும் வேலை இல்லாமல் திண்டாடுவோர் எண்ணிக்கை எவ்வளவு என்பதற்குப் புள்ளிவிபரம் தெரியவில்லை. எனினும் உலக முற்றிலும் சற்றேறக்குறைய சுமார் 700 லெட்சம் பேர்கள் வேலை இல்லாப்பிணிக்காளாகி இருக்கின்றனர் என்றும், இவர்களில் 400 லெட்சம் பேர்கள் இந்தியாவில் இருக்கின்றனர் என்றும், ஊகிக்கவேண்டி இருக்கிறது. இம்மாதிரி திடுக்கிடத்தக்கதான வேலை இல்லாது திண்டாடுவோர் எண்ணிக்கைப் பெருக்கிற்குக் காரணம் நம்நாட்டின் சீர்கேடான பொருளாதார நிலையே யாகும். இச்சீர்கேட்டைப் போக்கத்தக்க வழியை நாடுவதே நமது முன்நிற்கும் வேலையாகும். மேலும், நம் நாட்டுக் கலாசாலைகள் குமாஸ்தாக்களை உற்பத்தி செய்யும் தொழிற் சாலைகளாக இருக்கின்றனவென்பதையும், நம்நாட்டுப் பட்டாதாரிகள் கரிக்கு உதவாத ஏட்டுச் சுரைக்காய்களாகவும், எழுதும் இயந்திரங்களாகவும் விளங்குகிறார்களென்பதையும் நாம் அதிகம் கூறத்தேவை இல்லை. கல்வி என்பது ஆத்மார்த்த வாழ்க்கைக்கு உதவி புரிவதேயன்றி வயிற்றுப் பிழைப்புக்கு வழி தேடவன்று என சில பெரியார்கள் கூறுகின்றனர். அவர்கள் அபிப்பிராயம் மேலானதாக இருக்

சலாம். ஆனால், ஒரு மனிதனது பிழைப்புக்குப் பயனற்ற கல்வி இக்காலத்தில் இருப்பதைவிட இல்லாது ஒழிவதே மேலென்போம். மக்கள் வயிரார உண்டு வாழ உதவி புரியாத கல்வியை இந்நாட்டில் பரவாமல் தடுப்பதின் மூலம் இந்நாட்டின் பொருளாதாரத் துறையை நாம் ஓர் அளவு சீர்திருத்தியவர்களாவோம். சகலரும் உண்டு வாழ உதவும் கல்வி எது? அதுவே, தொழிற்கல்வி, வியாபாரக் கல்வி என்பவை யாகும். தொழிற் கல்வி ஓங்குக! வியாபாரக் கல்வி வளர்க!! வேலை யில்லாத் திண்டாட்டம் ஒழிக!!!

## திரு. ஸி. டி. நாயகம் விஜயம்.

சென்னை கூட்டுறவு இலாக்கா மாஜி டிப்டி ரிஜிஸ்திரார் திரு. ஸி. டி. நாயகம் மே-மீ 1-உ நம் நகருக்கு விஜயம் செய்தார். பொன்மலையில் நடந்த ரயில்வே தொழிலாளர் கூட்டத்திற்கு திரு. நாயகம் தலைமை வகித்து நிகழ்த்திய சொற்பொழிவைப் பிரிதோரிடத்தில் காண்க. பொறுக்கு மணிகள் நிறைந்த பெரியார் நாயகம் அவர்களின் சொற்பொழிவு கூட்டுறவாளருக்கு நல்லுபதேசமாகும். இதுவரையில் கூட்டுறவாளர் அன்பைக் கொள்ளைகொண்ட திரு. நாயகம் பொன்மலைத் தொழிலாளர்கள் இல்லங்கள் தோறும் குடிகொண்டுவிட்டார்.

மேலும், மே-மீ 2-உ யௌவன கூட்டுறவாளர் சங்கத்தார் அளித்த விருந்திலும், 3-உ ஸ்ரீரங்கம் வாலிப சங்கத்தார் கூட்டத்திலும், 5-உ தென்இந்திய விவசாயத் தொழிலாளர் சங்கக் கூட்டத்திலும், 5-உ தென்இந்திய ரயில்வே தொழிலாளர் சங்க ஆண்டு விழாவிலும் அவர் கூறிய மொழிகள் பொன்னேபோல் போற்றத்தக்கன.

இந்நகருக்கு திரு. ஸி. டி. நாயகம் விஜயம் செய்தது இதுவே முதல் தடவையாகும். இது போல் பன்முறை இப்பெரியார் இந்நகருக்கு விஜயம் செய்து, தமது அனுபவம் நிறைந்த, அறிவைப் பெருக்கும், சொற்பொழிவின் மூலம், கூட்டுறவாளர்களுக்கும் தொழிலாளர் தோழர்களுக்கும், புத்துயிர் அளிக்கவேண்டுமென விரும்புகிறோம்.

## விவசாயத் தொழிலாளர் சங்கம்

தென் இந்திய விவசாயத்தொழிலாளர் சங்கம் கிரமங்கலம் கிராமத்தில் ஏப்ரல்-மீ 20-உ நிறுவப்பட்டது. இச்சங்கத்தின் நோக்கம் விவசாயத்தொழிலாளரின் செல்வ விருத்திக்கும், மேம்பட்ட வாழ்க்கைக்கும் பாடுபடுவதாகும். இச்சங்கத்தார் அங்கத்தினர்களுக்குப் பொருளுதவி புரிந்து விவசாயத்தை விருத்தி செய்ய வேண்டுமென்ற நோக்கத்துடன் கூட்டுறவு பாங்கு ஒன்றினை அமைக்க ஏற்பாடு செய்திருக்கின்றனர். இவர்கள் முயற்சியில் வெற்றியடைவார்களாக!



# ஐக்கிய இத்தாலி

வி. மாத்ருபூதம் அய்யர்,

[திரு. வி. மாத்ருபூதம் அய்யர் அவர்கள் மதுரை ராமனாதபுரம் ஜில்லா கூட்டுறவு பெடரேஷன் பிரசாரக இன்ஸ்பெக்டர் என்ற முறையில் அருந்தொண்டு புரிந்துள்ளார். இத்தாலி தேசத்தின் சரித்திரத்தை அவர் ஆராய்ச்சி செய்து இந்நாட்டின் பிரசார வேலைக்கு ஒத்த முறையில் "இத்தாலி தேசத்தில் கூட்டுறவு" என்ற நூலைத்தொகுத்துள்ளார். இந்நூல் தமிழ் நாட்டிலுள்ள கூட்டுறவாளருக்கு சிறந்த பொக்கிஷமாகும். திரு. அய்யர் அவர்களுக்கு நமது நன்றி உரியதாகுக] (ப—ர்)

இத்தாலி தேசம் ஐரோப்பா கண்டத்தில் தெற்கு பாகத்திலுள்ள ஒரு தீபகற்பம். இத்தேசத்திற்கு வடக்கு எல்லையில் பெரிய மலையும், மற்ற மூன்று பாகங்களில் சமுத்திரமும் தெற்கில் ஒரு தீவும் இருக்கின்றதால் இதை சின்ன இந்தியா தேசம் என்றும் கூறுவார்கள்; இத்தேசத்தில் மலைகளும், ஆறுகளும், பெரிய நகரங்களும் உள. இத்தேசத்து சரித்திரம் பல நூற்றாண்டுகளாக மேன்மையுடையது. இத்தேசத்து கூட்டுறவு இயக்கம் பல வகையில் மேன்மையாயுள்ளது. கூட்டுறவு இயக்கத்தை பல வகையிலும் நம் தேசத்துடன் ஒப்பிடலாம். இத்தாலி தேசம் நம் தேசத்தைப்போல மிகவும் பிற்போக்கான விவசாயமும், கிராமாந்திர வாழ்க்கையுடனுமிருந்தது. ஆனால் நில வளப்பக்குறைவென்பதே இல்லை. பணமும், யூகமும் முக்யமாய் வேண்டி இருந்தது. அத்தேசத்துக் குடியானவர்களும் நம் தேசத்தாரைப் போல வேலை செய்யாமல் சோம்பேரிகளாய் இருப்பார்கள். ஆனால், ஒரு சமயத்தில் தூக்கத்தையும், சாப்பாட்டையுங்கூட கவனியாமல் ஓரே மூச்சாய் வேலைசெய்யக்கூடிய தன்மையுள்ளவர்கள். அத்தேசத்தில் கிராமாந்திரங்களிலுள்ள லேவாதேவிக்காரர்கள் குடியானவர்களுக்கு அதிக வட்டிக்குப் பணத்தைக் கொடுத்து அவர்களை முற்போக்கடைய விடாமல் கழுத்தை இறுகப்பிடித்துக் கொண்டிருந்தார்கள். கூட்டுறவு இயக்கம் இந்நிலையிலிருந்து மக்களை விடுவிக்க ஏற்பட்ட இயக்கமாகையால் அத்தத்துவத்தை உணர்ந்த இத்தாலி தேசத்து மக்கள் அதைக் கையாண்டு தேசம் செழிக்க விவசாயம் செய்து பன்முறையிலும் முற்போக்கடைந்திருக்கும் சரித்திரம் படிக்கப் படிக்க வியப்பைத் தருவதுடன் நம் தேசத்து ஜனங்களுக்கு உற்சாகத்தைத்தரும்.

கூட்டுறவு இயக்கம் இத்தாலி தேசத்தில் முதன் முதலாக 1850-ம் வருஷத்தில் ஆரம்பமாயிற்று. அவ்வருஷத்தில் டியூரின் நகரத்தில் பொதுவாய் தொழிலாளருக்கு ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர், இச்சங்கம் இவ்வியக்கத்திற்கே பிரதானமாய் விளங்கி வந்தது. 1854-ம் வருஷத்தில் இத்தாலி தேசத்தில் விலைவாசிகள் நிரம்ப அதிகமாய் இருந்த காரணத்தால் ஜீவனத்திற்கே கஷ்டம் ஏற்பட்டது. இதிலிருந்து தப்பிப்பதற்காக தொழிலாளர்கள் தங்களுக்கு வேண்டிய உணவுப் பொருள்களை மிகக் குறைந்த விலைக்கு வாங்கிக்கொள்வதற்காக அநேக சங்கங்களை ஸ்தாபித்துக் கொண்டார்கள். ஆனால், இப்படிச் செய்வதில் தங்களுக்கு பத்து வருஷங்களுக்கு முன்னால் இங்கிலாந்து தேசத்தில் சில தொழிலாளர்கள் தங்களுக்கிருந்த இம்மாதிரி குறைகளைத் தீர்த்துக் கொள்வதற்காக இதே மாதிரி பண்டகசாலைகள் ஏற்படுத்திக்கொண்டார்கள் என்ற தகவல் இவர்களுக்குத் தெரியவே தெரியாது. இவ்விரு தேசத்துத் தொழிலாளர்களும் அவர்களுக்கு இருந்த கஷ்டத்திற்கு கூட்டுறவு மருந்தையே உபயோகித்துக் கொண்டார்கள். விரைவில் தரகர்கள் அடைந்து வந்த லாபத்தைத் தடுத்து இவர்கள் சௌகரிய மடைந்தார்கள்.

இது கண்ட டியூரின் நகரத்து ரயில்வே தொழிலாளர்கள் தங்களுக்கென்று ஒரு சங்கத்தை அந் நகரிலேயே ஸ்தாபித்துக் கொண்

டார்கள். 1864-ம் வருஷத்தில் இச்சங்கத்தில் மட்டும் 10 லக்ஷம் லயர்களுக்கு வியாபாரம் நடத்தப்பட்டது. 1899-ம் வருஷத்தில் இச்சங்கம் கூட்டுறவு லக்ஷணத்திற்கேற்ப முதலில் கூறிய பொதுத் தொழிலாளர்கள் சங்கத்துடன் இணைத்துக் கொண்டது. சிறிதுகாலத்துக்கு முன் வரைக்கும் இச்சங்கமானது இத்தாலி தேசத்து கூட்டுறவு சரித்திரத்தில் முதன்மையான சங்கமாக விளங்கி வந்தது.

மிலான் நகரத்திலும் ரயில்வே தொழிலாளர்களாலேயே இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இச்சங்கங்கள் இங்கிலாந்து தேசத்து சங்கங்களின் அனுபவங்களை அறிந்து கொண்டதினால் பிரபலமாய் நடத்தப்பட்டன. உலகத்திலேயே வேறெந்த சங்கத்திலுமில்லாத 11 கோடி லயர்களுக்கு (2 கோடி ரூபாய்க்கு) ஒரு வருஷத்தில் வியாபாரம் நடத்தப்பட்டது. இம்மாதிரி, பண்டகசாலை இயக்கமானது இத்தாலி தேச முழுமையும் வெகு சீக்கிரத்தில் பரவி அநேக சங்கங்கள் தோன்றலாயின.

ஆனால், இத்தாலி தேசத்துக் கூட்டுறவு முறையிலே ஜெர்மனி தேசத்தைப்போல் ஒழுங்கான அமைப்பு இல்லாததினால் இவ்வியக்கத்திற்கே ஒரு பலக்குறைவு ஏற்பட்டது. சங்கங்கள் அதிகமாய் தோன்றினதினால் அவைகள் ஒன்றுக்கொன்று முரண்படவும், கக்ஷிப்பிரதி கக்ஷிகளும், சண்டை சச்சரவுகளும் உண்டாயின. இதிலும் இத்தேசத்து இயக்கத்தில் விசேஷமான ஒரு குணம் காணலாம். அதாவது இத்தேசத்தில் கூட்டுறவு ஸ்தாபனங்களுக்கும் ராஜீயக் கக்ஷிகளுக்கும் எப்பொழுதும் இடைவிடாத சம்பந்தமுண்டு. மற்ற தேசங்கள் போல மாசுமருவற்ற இப்பெரிய இயக்கத்தில் ராஜீயக் கக்ஷியினர் கலந்துகொள்ளாமல் இல்லை. இத்தாலி தேசத்தில் இரண்டு பெரிய ராஜீயக் கக்ஷிகள் இருந்து வந்தன. அவை கத்தோலிக்கர்களென்றும், சோஷலிஸ்டுகள் என்றும் பெயருடையன. இவ்விரு கக்ஷியினர்களின் நோக்கமும் காரியமும் ஒன்றுக்கொன்று ஒரு விதத்திலும் சம்பந்தப்படாது. கத்தோலிக்கர்கள் நோக்கமாவது சுயேச்சையாகும். ஒவ்வொருவரும் அவரவர்கள் ஆஸ்திகளையும் சம்பாதித்த பொருள்களையும் தனக்குத் தானே ஆண்டு அனுபவித்து வரவேண்டுமென்பதாகும். சோஷலிஸ்டு கக்ஷிக்காரர்களோ எல்லோருடைய சொத்தும் பொது உடைமை என்றும், ஆகையால் அவைகளை எல்லோரும் சமமாக அனுபவிக்க வேண்டுமென்றும் எண்ணங்கொண்டவர்கள். இதனால் தனவந்தர்கள் பேரில் இவர்களுக்கு தீராத வெறுப்பு இருந்து கொண்டே வந்தது. செல்வமோ, தேசமோ சமூகத்தின் பேராலேயே நடக்கவேண்டுமென்னும் எண்ணத்துடன் பாடுபட்டு வந்தார்கள். இதில் பெரும்பாலும் ஏழைப்பாமர மக்களே கலந்து கொண்டார்கள். கத்தோலிக்கர் கக்ஷியில் செல்வம் படைத்தோரும், செல்வாக்குள்ளோரும் கலந்து கொண்டிருந்ததுடன் இக்கட்சி கத்தோலிக்க சாமியார்களால் ஆதரிக்கப்பட்டு வந்தது. இம்மாதிரி மாறுபட்ட நோக்கமுடைய இரு சாரார் கூட்டுறவுச் சங்கங்களுக்குள் நுழைந்து கொண்டு வேலை செய்யத் தலைப்பட்டதால் அவரவர்கள் சங்கம் அவரவர்கள் கக்ஷியின் நோக்கம் போலவே நடத்தப்பட்டது. இவ்விரு கக்ஷியினரும் தங்கள் ராஜீயப் போராட்டத்திற்குப் பக்கபலமாக அநேக ஆயிரம் சங்கங்களை வைத்துக் கொண்டதால் அவரவர்கள் ராஜீய அதிகாரம் நடத்திய காலத்தில் அவரவர்கள் சங்கங்கள் வலுக்கலாயின. பிற சங்கங்கள் தாழ்ந்தன. இம்மாதிரி கக்ஷியில் கலந்து கொண்டதால் ஐக்கியம் ஏற்படவேண்டிய காலத்தில் கலகம் ஏற்பட்டு இயக்கத்திற்குப் பலக்குறைவு உண்டாயிற்று. இவ்விஷயத்தில் இத்தாலி தேசத்தில் ஒற்றுமை ஏற்படவேண்டுவது அத்தியாவசியமாகும்.

முதலில் பண்டகசாலைகள் ஏற்பட்டன. பின்னர் தேசத்தில் வியாபாரம் குறைந்து தொழிலாளர்கள் வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டிருந்த காலங்களில் வேலை கொடுப்பதற்காக வேலைச் சங்கங்களும், தொழிற் சங்கங்களும், விவசாயப் பண்ணைகளும், ஏற்படுத்த வேண்டியதாயிற்று. இத்தாலி தேசத்தில் கூட்டுறவு இயக்கத்திற்காக பாடுபட்டவர்களில் ஒருவரான நல்லோ பால்டினி என்பவர் 1853-ம் வருஷத்தில் கையினால் வேலை செய்வோருக்கு ஓர் சங்கத்தை ரவென்னா நகரில் ஸ்தாபித்தார். அச்சங்கம் ஏராளமான செதுப்பு நிலங்களையும், களர்



பூமிகளையும், சீர் திருத்தி மேடுபடுத்தி, விவசாயத்திற்கு லாயக்காக மாற்றி வேலைத்துவக்கம் செய்தது. ஆனால், ஆரம்பத்தில் அனுபவக் குறைவினால் அளவுக்கு மேல் செலவு செய்யப்பட்டதால் சங்கம் விரைவில் மூடப்பட்டது. பின்னர், அரசாங்கத்தாரே இவ்வேலையை எடுத்துக் கொண்டனர். அதன்பின் தொழிலாளர் சங்கங்கள் பல துறைகளிலும் பிரமாதமான வேலைகள் செய்யத் தலைப்பட்டன. பெரிய ரஸ்தாக்கள் போடுவது, பாலங்கள் கட்டுவது, கல் அறுப்பது, மரம் வெட்டுவது, வீடு கட்டுவது, ரயில்வே பாதை அமைப்பது, கண்ணாடி செய்வது போன்ற வேலைகளை இச்சங்கங்கள் செய்துள்ளன. இத்தேசத்திலுள்ள ஐக்கிய சங்கங்களை ஐந்து பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவை பின் வருமாறு :—

1. பண்டகசாலைகள் 2. நாணயச்சங்கங்கள் 3. வேலைச்சங்கங்கள் 4. தொழிற் சங்கங்கள் 5. விவசாயச் சங்கங்கள்.

## பண்டகசாலைகள்

இவற்றில் கடைசி மூன்றும் இத்தாலி தேசத்திற்கே பிரத்தியேகமானதாகும். முதலிரண்டும் இத்தேசத்தில் அதிக பிரபலமில்லாததால் அவைகளை விவரிக்கவேண்டியதில்லை. இச்சந்தர்ப்பத்தில் இங்கிலாந்து தேசத்தில் பண்டகசாலைகளும், ஜெர்மனி தேசத்தில் நாணயச்சங்கங்களும் பிரபலமாய் விளங்கின வென்று குறிப்பிடுவது தகும். அந்தந்த தேசத்து கூட்டுறவு சரித்திரத்தைப் படிப்போருக்கு அவை நன்கு புலப்படும். ஆனால், இத்தாலித் தேசத்து கூட்டுறவு பண்டகசாலைகள் வியாபாரிகளுடன் போட்டி போடாமல் சமரசத்தில் வேலைசெய்து வருகின்றன. இவைகளில் விற்கப்படும் சாமான்கள் மார்க்கட்டு நிலவரத்தை அனுசரிக்காமல் குறைவான விலைக்கே விற்கப்படும். இதுதான் இவர்களுக்கும் இங்கிலாந்திலுள்ள சங்கங்களுக்கு முள்ள வித்தியாசமாகும். இத்தாலி தேசத்திலிருக்கும் கூட்டுறவு பண்டகசாலைகளில் முக்கால்பாகம் மகாயுத்தத்திற்கு பின்னால் ஸ்தாபிக்கப்பட்டன. இச்சங்கங்கள் தேசத்தின் தென்பாகத்தைவிட வடபாகத்திலேயே பிரபலமாய் நடந்து வருகின்றன. பழைய சங்கங்கள் உணவுப் பொருள்களையே விற்றுவரும். புதிதாய் ஏற்பட்டவைகள் விவசாயக்கருவிகளையும், ஜோடு, துணி முதலிய இதர சாமான்களையும் விற்று வரும். சில கிராம நாணயச் சங்கங்களே பண்டக சாலைகளையும் நடத்தி வருகின்றன. எல்லாச் சங்கங்களிலும் சாமான்களின் விலை குறைவாகவே விற்றுவரப்படுகின்றது. சங்கத்தில் அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டிருக்கிறது. பங்கு தாரர்களுக்கு 100க்கு 5 பங்கிற்குமேல் லாபம் பிரித்துக் கொடுப்பதில்லை. ஆரம்பத்தில் சில வருஷங்கள் வரையில் லாபம்யாவும் க்ஷேம நிதிக்குச் சேர்க்கப்படும். ஒவ்வொரு கிராம பண்டக சாலைகளிலும் 500 முதல் 1000 பவுன் வரையிலும், பெரிய கிராமங்களில் 2000 பவுன் வரையிலும் வருஷாந்திர வியாபாரம் நடைபெற்று வருகிறது. பண்டகசாலைகளை நடத்துவதற்கு வேண்டிய திரவியத்திற்கு கிராமத்திற்கு வெளியில் கடன் வாங்குவதில்லை. நஷ்டம் வந்தால் சங்கத்தை நடத்தும் மானேஜரே பொறுப்புதாரர் ஆவார். அடிக்கடி மானேஜர்கள் மாற்றப்படுவார்கள். சங்கத்தில் அவர் ஒருவர்தான் சம்பளம் பெறுவார். பண்டங்களை வருஷத்திற்கு ஒன்று அல்லது இரண்டு முறை கணக்கெடுக்கப்படும். இச்சங்கங்களினால் கிராமவாசிகள் தங்கள் பணத்திற்கு நல்ல பிரதி பிரயோஜனம் கிடைத்திருப்பதாகக் கருதுகிறார்கள். ஆனால், சங்கங்களின் கணக்கு தணிக்கை செய்யப்படுவதில்லை. இதுதான் இத்தாலி தேசத்திற்கும், ஜெர்மன் தேசத்திற்கும் உள்ள வித்தியாசம். ஜெர்மனி தேசத்திலோ ஒரு ஐக்கிய சங்கம் ஏற்பட்ட உடனே அது ஒரு ஆடிட் யூனியனில் இணைக்கப்படும். அதுமுதல் அச்சங்கத்தின் கணக்குகள் ஆடிட் யூனியனால் பரிசீலனை செய்யப்படும். இத்தாலியில் அவ்வாறு இல்லை எனினும் அத்தேசத்து சங்கங்கள் நன்றாகவே நடைபெற்று வருவது கவனிக்கத்தக்கது.

## நாணயச்சங்கங்கள்

நாணயச்சங்கங்கள் ஜெர்மனியிலுள்ள ஷூலிஸ் டேலிட்ஸ் சங்கங்கள் மாதிரி அமைக்கப்பட்டாலும் இவைகளுக்கென பிரத்தியேகமான சில குணங்களுண்டு. அவையாதெனில், “ஜனங்களுடைய பாங்குகள்” என்று சொல்லப்படும்

இந்நகர பாங்குகளில் வித்தியாசமன்னியில் யாரும் பங்கெடுத்துக்கொள்ளலாம். குடியானவர்களும், சிறு தொழிலாளர்களும் பலர் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள். இந்த பாங்குகளின் பணம் விவசாயிகளுக்குத் தாராளமாய் கொடுக்கப்பட்டுவரும். பெரும்பாலும் டிபாஸ்டுகளைக் கொண்டே லேவாதேவி நடத்தி வரும் பாங்குகளால் செய்யப்படும் எல்லாவித காரியங்களும் இவைகளால் நடத்தப்பட்டு வரும். இதனால் ஐக்கிய பாவத்தைவிட வியாபாரபாவமே பெருகி வருகிறது. ஆனால், ஐக்கிய சங்கங்களுக்குச் செய்யும் உதவியால் பலவிதமான வேலைகள் நடத்தப்படுகின்றன. பாங்கின் பணம் திட்டப்படுத்தாததினால் பங்குகளின் விலை அதிகரித்துக் கொண்டே போகும். க்ஷேம நிதியிலும் பங்குத்தொகையைப்போல் அங்கத்தினர்களுக்கு பாகமுண்டாகையால் இவ்விதம் ஏற்பட்டிருக்கிறது. சாதாரண ஏழைகளும் அங்கத்தினர்களாகச் சேரவும், சிறிய தொகைகள் கடன் வாங்கவும், எஞ்சும் சிறிய தொகைகளை சேர்த்து வைக்கவும் இப்பாங்கிகள் உபயோகமாக இருக்கின்றன. அவ்விதம் பெருகிய தனத்தைக் கொண்டு வியாபாரம், தொழில் முதலியன நடத்தப்படுகின்றன. 18--ம் வருஷத்தில் முதன் முதலில் மில்லான் நகரில் லுஸ்ஸாட்டி என்பவர் ஒரு பாங்கு ஸ்தாபித்தார். இப்பொழுது இவைகள் ஏராளமாய் பெருகி நோவாராவிலிருக்கும் ஒரு பாங்குக்கு மட்டும் 46 கிளைபாங்குகளிருக்கின்றன. இவை எல்லாம் வரையறுக்கப்பட்ட பொருப்பிலேயே நடத்தப்படுகின்றன. இச்சங்கங்களெல்லாம் தனித்தனியே ஒன்றுக்கொன்று சம்பந்தா சம்பந்தமில்லாமல் நடைபெருவதே ஒரு பெரும் குறையாகும். அடமானக்கடன் என்பதே பாங்குகளில் கொடுக்கப்படுவதில்லை. இரு ஜாமீன்தார் பொறுப்பில் கடன்கள் கொடுக்கப்படும். அதில் ஒருவர் அங்கத்தினராய் இருக்கவேண்டும். எல்லா அங்கத்தினருக்கும் அவரவர் சக்தியைக்கணக்கிட்டு கடன் வாங்கும் அளவு வருஷா வருஷம் திட்டம் செய்யப்படும். இது கடன் வாங்குவதற்கு ஒரு பெரிய சாதகமாகும்.

இத்தாலி தேசத்தில் 1887-ம் வருஷத்தில் முதன் முதலாக ஒரு கூட்டுறவு பத்திரிகையும், எல்லாச் சங்கங்களுக்கும் பொது ஸ்தாபனமாக ஒரு தேசிய சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டன. மகாயுத்தம் முடியும் வரைக்கும் இந்த தேசிய சங்கமே எல்லா கூட்டுறவு சங்கங்களுக்கும் மத்திய ஸ்தாபனமாக இருந்து வந்தது. இச்சங்கம் ஆரம்பித்த 25 வருஷத்திற்குள்ளாக ஆயிரக்கணக்கான சங்கங்கள் இத்துடன் இணைக்கப்பட்டன. மகாயுத்தத்திற்குப் பின்னால் ராஜீயக் கக்ஷிகள் வலுத்துக்கொண்டு குழப்பமேற்பட்டதால் இதில் சேர்ந்திருக்கும் சங்கங்கள் மிகக் குறைந்து புதிதாய் உண்டான பாஸிஸ்ட் கட்சியில் அநேக சங்கங்கள் சேர்ந்து கொண்டன. ஆகையினால் தேசிய சங்கத்தின் உன்னத நிலை மாறி இயக்கத்தில் மேற்கூறிய கக்ஷிகள் கலந்து கொண்டன. இதனால் கூட்டுறவு சரித்திரமே மாறிவிட்டது. பிற்காலங்களில் என்ன நடக்குமோவென்று யூகித்துக் கூறுவதும் சிறிது கஷ்டமாகவே இருக்கிறது.

## கூட்டுறவு வேலைச்சங்கங்கள்

மகாயுத்தத்திற்கு முன்னமேயே இவ்வேலைச் சங்கங்கள் இத்தாலி தேச முழுமையும் பரவி இருந்தன. போ என்னும் நதிக்கரையில் சுமார் 50 வருஷங்களுக்கு முன்னால் முதன் முதலில் கைவேலைக்காரர்களுக்கு ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர், அரை நூற்றாண்டுக்குள் இடை விடாது இம்மாதிரி சங்கங்கள் விருத்தியாகி வந்தன. மகாயுத்தத்திற்கு முன்பு இத்தாலி தேசத்து பொது வேலை மந்திரியால் கொடுத்த கணக்குப்படி அத்தேசத்திலுள்ள இராஜாங்க கட்டிட வேலைகளில் சராசரி 100க்கு 15 பங்கு கூட்டுறவு வேலைச் சங்கங்களினாலேயே செய்யப்பட்டனவென்று தெரிகிறது. அதிலும், சில ஜில்லாக்களில் இக்கூட்டுறவுச் சங்கங்களினால் பெரும்பாலான வேலைகள்செய்து முடிக்கப்பட்டன வென்றும் தெரிகிறது. உதாரணமாக, ரவென்னா ஜில்லாவில் 100க்கு 80 பங்கும், பெராரா ஜில்லாவில் 100க்கு 90 பங்கும், எமிலியா ஜில்லாவில் 10 வருஷங்களில் நடத்தப்பட்ட பூரா கட்டிட வேலைகளும், கூட்டுறவு வேலைச் சங்கங்களாலேயே செய்து முடிக்கப்பட்டன. இவ்வாறு ராஜாங்க பொது மராமத்து இலாக்கா வேலைகளை கூட்டுறவுச் சங்கங்கள் செவ்வனே செய்து முடிக்கக் கூடுமாவென்று சில பொருளாதார நிபுணர்கள் சந்தேகிக்கலானார்கள். ஆனால், பொதுஜன ஊழியத்திற்கே தங்கள் காலத்தையும், புத்தி நுட்பத்தையும் கொடுத்து உதவிய பெரிய சிற்பிகளும், பெரியார்களும் பலர் இருந்ததால் பெரிய கட்டிட வேலைகள் எளிதில் செய்து முடிக்கப்பட்டுள்ளதெனலாம்.

## வேலைச் சங்கங்களின் நோக்கம்

சாதாரணமாய் இச்சங்கங்கள் எந்த வேலை செய்தாலும் கண்டிராக்டர்கள் என்று கூறப்படும் ஒப்பந்தக்காரர்களின் லாபத்தைத் தடுத்துத் தாங்களே அந்த லாபத்தைப் பங்கிட்டுக்கொள்ள முடிகிறது. விசேஷமாய் தங்கள் வேலைகளுக்கு வேண்டிய சகல சாமான்களையும் தாங்களே சுரங்கங்களிலிருந்து வெட்டி எடுத்தும், தொழிற்சாலைகளேற்படுத்திக் கொண்டும், எவ்விதத்திலும் பிறர் லாபமடையாமல் அவைகளை தாங்களே செய்து கொள்வதாகும். இவ்வித ஏற்பாடுகளினால் சொந்த முதலாளிகள், கண்டிராக்டர்கள் ஸ்தானங்களில் சங்கங்களே இருந்து கொண்டு வேலை நடத்தின. கட்டிட வேலைகளுக்குத் தேவையான சாமான்களுக்காகக் கண்ணாடித் தொழிற்சாலையும், இரும்புத் தொழிற்சாலையும், மற்றும் பல தொழிற்சாலைகளும் ஏற்படுத்தப்பட்டன. பெரும் புகைகப்பல்கள் கட்டும் வேலையும் செய்ய முற்படலாயினர். இம்மாதிரியான தொழில் செய்வதற்கு உற்பத்தி வேலைகளைத் துடங்கி அவைகளுக்கு சாதகமாய் வைத்துக்கொண்டிருப்பதினால் இத்தாலி தேசத்துத் தொழிலாளர்கள் உலகத்தாருக்கே ஒரு நூதன வழியைக்காண்பித்திருக்கிறார்கள்.

## சங்கங்கள் செய்துள்ள வேலைகள்

மிலான் நகரில் உன்னத மாளிகைகளினால் அலங்கரிக்கப்பட்டிருக்கும் தெருக்களும், பெரிய அச்சுயந்திரசாலைகளும், கூட்டுறவாளர்களால் கட்டப்பட்டிருக்கின்றன. ரோமாபுரியில் அநேக மைல் தூரங்களுக்கு ஜலதாரைகளும், உத்யானவனங்களும், அழகான மாதா கோவில்களும், கட்டப்பட்டுள்ளன. பொலோனா நகரில் இத்தாலி தேசத்திற்கே பெயர் பெற்ற பாலமும் பிளாரன்ஸ் நகரில் பிர்மாண்டமான தேசிய கலாசாலைகளும், டியூனிஸ் நகரில் பள்ளிக்கூடங்களும், அரண்மனைகளும், இவர்களாலே கட்டப்பட்டிருக்கின்றன. ரவென்னாவில் விவசாயத்திற்கு லாயக்காக அனேகம் ஏக்கர் நிலங்களை சீர்திருத்தி இருப்பதும் இவர்கள் வேலையேயாகும். சில இடங்களில் கப்பல்கள் செல்லக் கூடிய பெரிய கால்வாய்களும், ரயில் பாதைகளும், ஸ்டேஷன் கட்டிடங்களும், இவர்களால் கட்டப்பட்டிருக்கிறது. சில இடங்களில் ரயில்வே நிர்வாகம் கூட இவர்கள் வசம் இருந்து வருகிறது. இவ்வித திறமை வாய்ந்த நுட்பமான வேலைகள் கூட்டுறவுச்சங்கங்கள் செய்துவருவது இத்தாலி தேசத்திற்கே ஒரு பெருமையைத் தருகிறது.

## அரசாங்கத்தின் ஆதரவு

இவர்களிடத்தில் அரசாங்கத்தாருக்கு இருக்கும் அபிப்பிராயத்தைத் தெரிவிப்போம். மாறி மாறி வந்துகொண்டிருந்த அரசாங்க உத்தியோகஸ்தர்களும், மந்திரிமார்களும் இச்சங்கங்களிடத்து ஆதரவு காட்டி வந்தார்கள். தேசசட்டத்தில் முதன் முதலாக ஆதரவு காட்ட அதிகாரமில்லாமலிருந்தது. 1889-ம் வருஷத்தில் மாறுதலான சட்டத்தில் ஒரு லட்சம் லயர்கள்வரை கூட்டுறவுச் சங்கங்கள் சர்க்காருடன் தனி உடன்படிக்கை மூலம் கண்ராக்ட் வேலைக்கு ஒப்பந்தம் செய்து கொள்ளலாமென்று ஒரு விதி செய்யப்பட்டது. இச் சீர்திருத்தத்திற்கு இத்தேசத்தில் கூட்டுறவு பாங்குகள் ஸ்தாபித்த பிரதமகூட்டுறவாளராகிய லஸ்ஸாட்டி என்ற பிரபு அச்சமயத்தில் அரசாங்கத்திற்கு கஜானா மந்திரியாக அமர்ந்ததே காரணம். பின்னால், இந்த தொகை நிபந்தனையும் நீக்கப்பட்டது. 1919-ம் வருஷத்தில் மகாயுத்தம் முடிவடைந்தவுடன் தேசத்திலேற்பட்ட வேலை இல்லாத் திண்டாட்டத்தை நிவர்த்தி செய்வதற்காக அரசாங்கத்தார் 150 கோடி லயர் (30 கோடி ரூபாய்) செலவு செய்து கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாய் தேசத்தில் புனருத்தாரண வேலைசெய்தார்கள். இதனாலேயே இவர்களின் வேலையை நன்கு மதிப்பிடக்கூடும்.

## வேலையின் திறமை

இம்மாதிரி கூட்டுறவு சங்கங்களுக்கு அரசாங்கத்தார் ஆதரவு கொடுத்ததிலிருந்து அவர்கள் செய்த வேலையின் திறமையை மதிப்பிட்டிருக்கி

றார்கள். தனிக்கண்ட்ராக்டர்கள் செய்யும் வேலையைவிட சங்கங்கள் செய்யும் வேலையானது திறமையாய் செய்யப்பட்டிருக்கின்றன. சீக்கிரமாய் முடிவடைந்திருக்கின்றன. பல்வேறு வகைப்பட்ட பெருந்திரளான தொழிலாளர்களைச் சங்கங்கள் பெற்றிருப்பதே இதற்கு முக்ய காரணம். கணக்குத் தீர்ப்பதில் சச்சரவுகளின்றி மத்தியஸ்தர்களின் தீர்ப்புக்குக் கட்டுப்படுவது இச்சங்கங்களிடமுள்ள விசேஷ குணமாகும். வேலை நிறுத்தம் என்பதே இவர்களிடத்தில் கிடையாது. எந்த மாதிரியான வேலையையும் சிரமமன்னியில் செய்து முடிக்கிறார்கள். இதனால் சர்க்கார் ஏராளமான வேலைகளை இவர்களிடம் நம்பி விட்டு ஒருவிதக்கவலையுமின்றி இருப்பார்கள். இத்தொழிற்சங்கங்கள் ஆதியில் ஆரம்பிக்கப்பட்டபொழுது மெலிந்து சீர்கேடாயிருந்தாலும் நாளடைவில் உழைப்பாளிகளின் சேர்க்கையாலும், புத்திமான்களின் யோசனையாலும், அரசாங்கத்தின் ஆதரவாலும் வேறான்றி எல்லோருக்கும் இடைவிடாத நன்மையளிக்கலாயிற்று.

## சங்கங்களின் அமைப்பு

தொழிற் சங்கங்களுக்கெல்லாம் ஒரு வித அமைப்பு உண்டு. அநேக பிரதம சங்கங்கள் ஒரு மாகாண யூனியனில் சேர்ந்திருக்கும். மாகாண யூனியன்களெல்லாம் ஒன்றாய்ச் சேர்ந்தது தேசீய பெடரேஷனாகும்.

சாதாரணமாய் பெரும் வேலைகளை பணமும், திறமையும் வாய்ந்த வேலைக்காரர்களை உடைத்தாயுள்ள ஒரு மாகாண யூனியனோ அல்லது தேசீய பெடரேஷனோ கண்டிராக்ட் எடுக்கத் தலைப்படும். இப்பெரிய சங்கங்கள் தன்னுள் அணைக்கப்பட்டிருக்கும் பலமாதிரி பிரதம சங்கங்களுக்கு அப்பெரிய வேலைகளை அவரவர்களுக்குத் தகுந்தபடி பிரித்துக்கொடுத்து வேலை வாங்கும். இப்பிரதம சங்கங்கள் கல்வேலை, பளிங்குவேலை, மரவேலை, உலோகவேலை, மின்சாரவேலை, இன்ஜின்வேலை, செப்பவர்களால் தனித்தனியே நடத்தப்பட்டு வரும். இவைகள் தத்தம் வேலைகளைத் திறமையுடன் செய்து முடிக்கும். இத்தாலி தேசத்திற்கே கட்டிட வேலை செய்பவர்களுக்கெல்லாம் தலைமை சங்கமாகிய பெடரேஷன் டியூரின் நகரில் இருக்கிறது. இச்சங்கம் 1921-ம் வருஷத்தில் ஸ்தாபிக்கப்பட்டது. 1923-ம் வருஷத்தில் இச்சங்கத்தாரால் மொத்தம் செய்யப்பட்ட வேலைகள் 83 லக்ஷம் லயர்களாகும் (16 லக்ஷம் ரூபாய்.) இந்த பெடரேஷனில் பிரதம சங்கங்களும், மாகாண யூனியன்களும், தேசீய பெடரேஷனும் சேர்ந்திருக்கின்றன.

## பிரதம சங்கம்

இச்சங்கங்களின் பங்கு மூலதனம் வரையறுக்கப்படாதது. பங்கொன்று 50 லயர்கள் (ரூ. 10) பெருமான முள்ளது. வாரத்திற்கு 1 லயர் விகிதம் செலுத்தப்படவேண்டும். அப்படிச் செய்தால் ஒரு வருஷத்திற்குள் பங்கு பூர்த்தியாகிவிடும். க்ஷேம நிதியும் ஒதுக்கி வைக்கப்பட்டு சங்கத்தில் தொழில் முறை பயிற்சிக்கும், வயோதிக ரக்ஷணைக்கும் தனித்தனி நிதிகள் சேர்க்கப்பட்டு வரும். ஒரு சங்கத்தில் எத்திறமை வாய்ந்த வேலைக்காரனும் அங்கத்தினராகச் சேரலாம். அங்கத்தினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டதே. அவர்கள் வேலை செய்யும் காலத்தில் தொழில் முறையை அனுசரித்தே நடந்துகொள்ள வேண்டியது. ஐந்து முதல் பதினொரு பஞ்சாயத்தார்கள் கூடி சங்க நிர்வாகம் நடத்துவார்கள். பஞ்சாயத்தார்களுக்குள் அக்ராசனாதிபதியும், உப அக்ராசனாதிபதியும், காரியதரிசியும், பொக்கிஷதாரையும், ஏற்படுத்திக் கொள்ளுவார்கள். அக்ராசனாதிபதி பேரிலேயே சட்டப்படி விவகாரங்கள் நடத்தப்படலாம். வேலை கண்டிராக்ட் எடுக்கும் விஷயத்தில் மேம்பார்வை புரியும், மாகாண யூனியன்களின் அதிகாரத்திற்கு உட்பட்டே நடந்து கொள்ளப்படும். இச்சங்கங்களுக்குத் தொழில் முறையில் ஆலோசனை கூறக் கூடியவர்கள் மாகாண யூனியனால் நியமிக்கப்படுவார்கள் அவர்கள் சங்கத்திற்கும் யூனியனுக்கும் கீழ்படிந்து நடக்கக் கடமைப்பட்டவர்கள். சங்கத்து லாபத்தில் 100-க்கு 40 பங்கு வேலைக்காரர்களுக்கு அவர்கள் செய்த வேலை அளவைக் கணக்கிட்டு கொடுக்கப்படும். பாக்கி இருக்கும் 60 பங்கும் க்ஷேம நிதிக்கு சேர்க்கப்பட்டு, அத்தொகை மாகாண யூனியனாரிடமோ, தேசீய பெடரேஷனாரிடமோ, தனியாய் கட்டி வைக்கப்படும்.



## மாகாண யூனியன்

மாகாண யூனியன் தன்னுடன் இணைக்கப்பட்டுள்ள சங்கங்களின் சார்பாக கட்டிட வேலை, ரயில் பாதை அமைக்கும் வேலை, முதலியவைகளை ஏற்றுக்கொண்டு நடத்திவரும். ஒவ்வொரு பிரதம சங்கமும் மாகாண யூனியனில் சேர்ந்தவுடன் தங்கள் அங்கத்தினர்களிடமிருந்து வசூலித்த பங்குத் தொகையில் ஐந்தில் ஒரு பாகத்தை யூனியனிடம் கொடுத்து விடும். யூனியன் சம்பாதித்த லாபத்தில் சரிபாதியை தன்னிடம் பங்கெடுத்திருக்கும் சங்கங்களுக்கு 100-க்கு 5 விகிதம் பங்கு லாபம் கொடுத்துவிடும். யூனியன் லாபத்தில் கால்பாகத்தை தேசீய பெடரேஷனுக்கு அதன் அபிவிருத்திக்காகக் கொடுத்து விடும். மீதி கால்பாகத்தை க்ஷேம நிதிக்கு ஒதுக்கிவைக்கப்படும். ஒவ்வொரு பிரதம சங்கமும், மாகாண யூனியனுக்கு 5 பிரதிநிதிகள் அனுப்ப வேண்டும். யூனியன் நிர்வாகம் 7 பேர் சேர்ந்த போர்டாரால் நடத்தப்படும். யூனியன்கள் அடியில் கண்ட முக்கிய வேலைகளை நடத்திவரும்.

1. சங்கங்களுக்கு வேலைக் கண்டிராக்ட் எடுப்பது, அதற்கு வேண்டிய சாமான்களை தயார் செய்து கொடுப்பது.

2. சங்கங்களுக்கு யோசனை சொல்லி நடத்துவதற்கு நிபுணர்களை நியமிப்பது, தேசீய பெடரேஷன் உத்திரவின் பேரில் அவர்களைத் தள்ளுவதும், மானேஜர்கள், இன்ஸ்பெக்டர்கள், குமாஸ்தாக்களை நியமிப்பதும், தள்ளுவதும்.

3. யூனியன் நிர்வாகத்திற்கு வேண்டிய விதிகள் செய்வது.

4. வருஷாந்திர ஆஸ்திப் பொருப்பு கணக்குகள் தயாரிப்பது.

5. யூனியனுக்கே வேலைக் கண்டிராக்டுகள் எடுப்பதும், அதைச் செய்து முடிப்பதும்.

6. யூனியனும் சங்கங்களும் எடுத்திருக்கும் வேலைகளுக்கு வேண்டிய சாமான்கள் வாங்குவது.

7. யூனியன் காரியங்களை சரிவர நடத்துவதற்கு காரியஸ்தர்களை நியமிப்பது.

சங்கங்களின் வேலையை நடத்துவதற்காக யூனியன் நியமிக்கும் நிபுணர்கள் எந்தச்சங்கத்திலும் அங்கத்தினராக இருக்கவேண்டிய அவசியமில்லை. இவர்கள் வேலைக்கு உதவியாக சில உத்தியோகஸ்தர்கள் போர்டாரால் நியமிக்கப்படுவார்கள். இவர்களுக்கு யோசனை சொல்ல ஒரு தனிக்கமிட்டி ஏற்படுத்தப்படும். யூனியன் எடுத்திருக்கும் வேலைகளில் வேலை செய்பவர்கள் ஏதாவதொரு சங்கத்தில் அங்கத்தினராய் இருக்கவேண்டும். நெருக்கடியான சமயங்களில் மட்டும் அங்கத்தினரில்லாதவரையும் சிறிது காலத்துக்கு வேலைக்கு சேர்த்துக்கொள்ளப்படும். சங்கங்களின் கணக்குகளை பரிசீலனை செய்வதும், அவைகளை சரிவர நடத்துவதும் மாகாண யூனியன்களின் காரியமே.

## தேசீய பெடரேஷன்

145729.

தேசீய பெடரேஷனுக்கும் பல வேலைகள் உள. மாகாண யூனியன்களின் வேலைகளை ஒருமைப்படுத்தி நடத்துவதும், பல மாகாணங்களில் செய்யப்படவேண்டிய வேலைகளைக் கண்டிராக்ட் எடுப்பதும், அவ்விடங்களிலிருக்கும் மாகாண யூனியன் பிரதம சங்கங்களைக் கொண்டு அவ்வேலைகளை நடத்துவதும், கல்வேலைகளுக்கு கருங்கல் வெட்டி எடுத்தும், சுண்ணாம்புக்காளவாய் போட்டும், உலோகங்களுக்கு தொழிற்சாலை ஏற்படுத்தியும், ரோட்டுகள், ரயில் பாதைகள், போடுவதற்கு பிளான்கள் தயாரித்தும், வேலையாட்களுக்கு ரக்ஷணை நிதி ஏற்படுத்தியும், இத்தியாதியான பல வேலைகளுக்குத் தேவையானவைகளை ஏற்பாடுகள் செய்வதும் பெடரேஷன் வேலையாகும். ஒவ்வொரு சங்கமும் தாங்கள் வசூலித்தப் பங்குத்தொகையில் பத்தில் ஒரு பங்காவது தேசீய பெடரேஷனில் பங்கெடுத்துக் கொள்ளவேண்டும். வருஷ லாபத்தில் கால் பங்கு க்ஷேம நிதியாக இச்சங்கத்தில் கட்டிவிட வேண்டும். பெடரேஷனின் மூலதனம் இம்மாதிரி பெருகிக் கொண்டே போகும். இதன் லாபத்தில் சரி பாதி வேலைக்காரர்களின் உதவிக்காகவே செலவழிக்கப்படும். மறுபாதி க்ஷேம நிதிக்கென வைக்கப்படும். தேசீய பெடரேஷனின் காலகதி பத்து வருஷமாகும். இதை நிர்வாகம் செய்துவரும் போர்ட் அங்கத்தினர்கள் இதில் சேர்ந்திருக்கும் சங்கங்களைப்போய் பார்வையிட்டும், பரிசீலனை செய்தும் வருவார்கள். மற்றும், இவர்கள் வருஷாந்

திரக் கணக்குகள் தயார் செய்தும், வேலைகளுக்கு வேண்டிய யந்திரங்கள் வாங்கியும், வேலையாட்களை நியமித்தும், தள்ளியும், வேண்டிய தனத்தை சேகரித்தும், தான் எடுத்துக்கொண்ட வேலைகளை முடிவு பெறச்செய்ய வேண்டிய எல்லா வேலைகளையும் செவ்வனே செய்து முடிப்பார்கள். தேசீய பெடரேஷனின் முக்ய அலுவல்கள் தேசத்துக் குறித்தான வேலைகளைச் செய்யத்தொடங்கி, அதை மாகாணங்களுக்குப் பிரித்துக்கொடுத்து, அவைகளை மேம்பார்வை செய்வதும், அவைகளுக்கு வேண்டிய நிபுணர்களைத் தயாரித்துக் கொடுப்பதாகும்.

1923-ம் வருஷத்தில் தேசீய பெடரேஷனில் 984 சங்கங்களும், 49,360 அங்கத்தினர்களுமிருந்தார்கள். அவ்வருஷத்தில் 138 லக்ஷம் லயர்களுக்கு வேலைகள் நடத்தப்பட்டன. இதன் மூல புருஷர் எட்மண்டோ டெல்ப பலோ என்பவர். இவர் தன்னுடைய விசேஷ ஆற்றலையும், புத்தி நுட்பத்தையும், இதற்களித்து வேலை நடத்தி வந்ததால் இத்தாலி தேசத்தின் கூட்டுறவு இயக்கத்திற்கே இவர் தந்தையென பெயர் பெற்று விளங்கலானார். இம்மாதிரியான தொழில் முறையைக் கூட்டுறவு இயக்க உலகில் எங்கும் காண்பதரிது. இச்சங்கங்களெல்லாம் தொழிலாளர்களாலேயே உண்டாக்கப்பட்டன. இவற்றின் விருத்தி தேசமக்களின் மனோ சக்தியைப் பொருத்திருக்கிறது. மக்களின் மனோ சக்தியே இச்சங்கங்களை என்றும் சோர்வடையாதவாறு இருக்கச் செய்து வருகிறது. மகா யுத்த காலத்தில் இடிந்த கட்டிடங்களால் தேசமே நிரப்பப்பட்டு சேத சின்னங்கள் எங்கும் காணப்பட்டிருந்ததை சிறிது காலத்திற்குள் அழகான வீடுகளாகவும், மாளிகைகளாகவும், பள்ளிக்கூடங்களாகவும் மாற்றியும், சேதமடைந்த நிலங்களில் நேர்த்தியான திராக்ஷை தோட்டங்களும், உத்தியாவனங்களும் உண்டாக்கியும், தங்கள் விடா முயற்சியாலும், ஊக்கத்தினாலும், சண்டையில் நடத்தப்பட்ட கொடூரச் செயல்களை மாயையைப்போல் மாற்றி விட்டார்கள். இதனால் இவர்கள் பிற தேசத்தாருக்கும் ஒரு வழி காண்பித்திருக்கிறார்கள்.

தேசீய பெடரேஷன் தன் முயற்சியால் அதிகாரிகளையும், மற்றவர்களையும் சந்தித்து சங்கங்களுக்காகச் செய்த வேலை ஏராளமானதாகும். முதல் ஐந்து வருடங்களில் பெடரேஷன் அடியில் கண்ட வேலைகளை செய்து முடித்திருக்கிறது.

| வேலை விபரம். | தொகை. | லயர்கள். |
|---|---|---|
| மிலான் நகரத்தில் செய்த வேலை | 6,328,893,22 | ,, |
| ஆஸ்பத்திரிகள் | 1,057,671,00 | ,, |
| அரசாங்க ரயில்வேக்கள் | 136,896,74 | ,, |
| ,, டெலிபோன் | 388,625,57 | ,, |
| ,, தந்தி | 593921 | ,, |
| | 4,65,00 | ,, |
| திக்கற்றவர்களுக்கு விடுதிகள் | 47,83968 | ,, |
| புத்தி ஸ்வாதீனமில்லாதவர்களுக்கு ஆஸ்பத்திரிகள் | 10,148,06 | ,, |

இம்மாதிரியான பல அரிய வேலைகளை பெடரேஷன் செய்து வந்திருக்கிறது. ஆனால், 1923-ம் வருஷத்தில் ஏற்பட்ட ராஜீயக் கிளர்ச்சியினால் பாவிஸ்ட் கட்சியினரின் நிர்பந்தத்தினால் பெடரேஷன் சில மாறுதலடைய நேர்ந்தது. பெடரேஷனைச் சேர்ந்த சில அங்கத்தினர்களைத் தள்ளியும், ராஜீய இயக்கத்தில் இதனை ஈடுபடுத்தியும், இப்புதிய ராஜீயக் கட்சியினர் வேலை செய்ய முற்பட்டதினால் சில மாறுபாடுடன் பெடரேஷன் ஜீவிக்கலாயிற்று.

## சங்கங்கள் விபரம்

1920-ம் வருஷத்தில் இத்தாலி தேசத்தில் 2500 சங்கங்கள் இருந்தன. மகாயுத்தத்திற்குப் பிறகு இவைகள் அதிகரித்துக் கொண்டே வந்தன. இதற்குக் காரணம் ஜனங்களுக்கு சுதந்திரத்தில் ஆசையும், வேலை இல்லாத்திண்டாட்டத்தைத் தவிர்ப்பதற்கு அரசாங்கத்தார் ஏராளமான பணச் செலவு செய்து தேசியப் புனருத்தாரண வேலைகளை இக்கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக செய்ய முற்பட்டதுமே யாகும். இச்சங்கங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களில் முக்கால் பாகம் நகரங்களிலிருந்து வந்த வேலைக்காரர்களாகவே இருப்பார்கள். இச்சங்கங்களுக்கெல்லாம் தேசிய ஸ்தாபனம் வேண்டிய ஒத்தாசைகள் புரிந்து வந்து இவைகளின் வளர்ச்சிக்கே காரணமாயிருந்தது. இவைகள் செய்த வேலை அளவைக் கணக்கிட்டு இவைகளுக்குக்



கிடைக்க வேண்டிய பணத்தொகைகளை ஆதாரமாகக்கொண்டு பணஉதவி செய்து வந்தது. இவ்வேலைச் சங்கங்களை மேம்பார்வை புரிவதில் சிரமமேற்பட்ட போதிலும் வேலைக்காரர்கள் தங்களுக்கு சுயேச்சையாய் நல்ல கூலி கிடைக்கப்பெற்று, அதனால் அவர்கள் வாழ்வு மேம்பட்டு, வேலை இல்லாத் திண்டாட்டத்தை அனுபவிக்காமலிருந்ததால் அவர்களுக்கு உயர்ந்த சாதனம் கிடைக்கலாயிற்று. இதனால் தேசத்திற்கும் நன்மை விளைந்தது. இல்லையேல் ஏனைய தேசங்களில் உள்ளதுபோல் வேலை நிறுத்தமும் வேலை இல்லாத் திண்டாட்டமும் இத்தேசத்திலும் நடந்து அரசாங்கத்தாருக்கு மிகுந்த கஷ்டத்தை உண்டாக்கி இருக்கும்.

இத்தேசத்தில் மற்றும் ஓர் விசேஷமென்னவென்றால் சங்கங்கள் எண்ணிக்கையில் அதிகரித்து, பற்பல விதமாக நடந்து வரலாயின. ஒவ்வொருவித தொழிலாளர் சங்கமும் அந்தந்த தொழிற் கட்சியில் அங்கத்தினராயிருக்கும். ரவென்னாவில் மட்டும் 75 தொழிலாளர் சங்கங்கள் இருக்கின்றன. அவைகள் கீழ்க்கண்ட பிரகாரம் நடத்தப்படுகின்றன.

| கொத்து வேலைக்காரர்கள் | சங்கம். |
|---|---|
| சிமெண்டு | ... |
| தச்சு | ... |
| பளிங்கு | ... |
| கல், தச்சு | ... |
| வர்ணம் | ... |
| கண்ணாடி | ... |
| கன்னான் | ... |
| துறைமுக | ... |
| ரயில்வே போர்டர்கள் | ... |
| மாலுமிகள் | ... |
| வண்டி ஓட்டுகிறவர்கள் | ... |

இவை ஒவ்வொன்றிலும் சுமார் 30 முதல் 3000 வரை வேலைக்காரர்கள் அங்கத்தினர்களாகச் சேர்ந்திருக்கிறார்கள். 1919-ம் வருஷம் ஜனவரி-மீ 10-வயில் இத்தாலி தேச முழுமையிலுமுள்ள தொழிலாளர் சங்கங்களுக்கெல்லாம் ஒரு தேசிய பெடரேஷன் ஸ்தாபிக்கப்பட்டது. இதன் தலைமை ஸ்தாபனம் ரோமாபுரியில் உள்ளது.

## ஒரு நேர்மையான சங்கம்

இத்தாலி தேசத்து கூட்டுறவு சரித்திரத்திலே ரவென்னா மிக்க பெயர் வாய்ந்தது. இவ்வூரில் தான் முதல் முதலில் சங்கங்களாரம்பித்தன. இவ்வூரிலே பலமாதிரி சங்கங்கள் மிக்க கியாதியாய் விளங்குகின்றன. ஆதியிலேற்பட்டதும், தேசத்திற்கே முதன்மையாயுள்ளதுமான சங்கம் ரவென்னாவில் கையினால் வேலை செய்பவர்களுக்காக ஏற்பட்ட பொதுச்சங்கம். இச்சங்கமே முதன் முதலில் கூட்டுறவு விவசாயம் செய்யத் தலைப்பட்டது. இச்சங்கமேற்பட்டு சுமார் 50 வருஷங்களாயின. ஆதியில் 300 வேலைக்காரர்களுடன் ஆரம்பிக்கப் பட்டது. பின்னர் 3700 அங்கத்தினர்கள் ஏற்பட்டனர். கண்டிராக்டர்களுடைய லாபத்தை தடுத்துத் தான் பயனடைய வேண்டுமென்பதே இச்சங்கத்தின் முக்கிய நோக்கமாகும். இச்சங்கம் எடுத்துக்கொண்ட வேலை சாமான்யமானதல்ல. அக்காலத்தில் வேலைக் கண்டிராக்ட்டுகள் பகிரங்க ஏலத்தில் விடப்பட்டபோது செல்வாக்கு மிகுந்த அக்கண்டிராக்டர்களை எதிர்க்க யாரால் முடியும்? அநேகம் தடவைகளில் சங்கம் தோல்வியுற்றது. அதிக தொகைக்கு ஏலம் எடுக்க சக்தியற்றும், தன்னில் சேர்ந்திருக்கும் பல தேர்ச்சி பெற்ற வேலைக்காரர்கள் கண்டிராக்டர்கள் கொடுக்கும் அதிகக் கூலிக்கு ஆசைப்பட்டு பிரிந்து போயும், பலவித கஷ்டப்பட்டது. ஆகையினால், கொஞ்சகாலம் வரைக்கும் இச்சங்கம் சிறிய வேலைகளான ரோடுகள் போடுவதும், மண் வெட்டி கரைகள் போடுவதும் போன்ற வேலைகளே செய்து வந்தது. கொஞ்ச காலத்திற்குள் கட்டிடம் கட்டும் பெரிய வேலைகள் செய்யத்தொடங்கி 1922-ம் வருஷத்தில் ஒரு ரயிலுக்கு மேம் பாலமும் கட்டியது. அவ்வருஷத்தில் 15,000 பவுனுக்கு வேலை செய்யப் பட்டது.

பொதுவாக, இக்கூட்டுவு வேலைச்சங்கங்களில் எக்காலத்தும் எல்லா அங்கத்தினர்களுக்கும் வேலை கொடுக்க சாத்தியமாயிராது. ஆகையினால், ஒருவர் மாறி ஒருவருக்கு வேலை கொடுத்துக்கொண்டு வரப்படும். இம்மாதிரி உடன்படிக்கை எல்லோருடைய சம்மதத்தின்பேரில் நடக்கும். ரவென்னாவில் ஏற்பட்டிருக்கும் இச்

சங்கம் எல்லா அங்கத்தினர்களுக்கும் எக்காலத்திலும் வேலை கொடுக்க எண்ணிக்கொண்டு 1886-ம் வருஷத்தில் கூட்டுறவு விவசாயம் செய்யத் தலைப்பட்டது. இதுபொழுது 2500 எக்கர் நிலங்களை சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதில் 1500 எக்கர் நிலத்தின்பேரில் லக்ஷம் பவுன் கடன் கொடுத்துமிருக்கிறார்கள். இவர்கள் இம்மாதிரி வேலை செய்ததின் பயனாக மிகவும் செதுப்பு பூமியாகவும், விஷக்காய்ச்சலுக்கே உற்பத்தி ஸ்தானமாகவுமிருந்த பிரதேசம் முழுவதும் தண்ணீர் வடித்து, மேடிட்டு, சீர்படுத்தி அந்நிலங்களை ஜனங்களின் வாசத்திற்கு லாயக்கானதாக மாற்றி விட்டார்கள். இந்த பிரயாசையான வேலை செய்து முடித்ததுடன் ரோமாபுரியைச் சுற்றிலுமுள்ள பூமிகளை அழகுபடுத்தி சிறப்பித்திருக்கிறார்கள்.

இச்சங்கத்தின் வேலையாவும், இரண்டு உத்தியோகஸ்தர்கள் தவிர, எல்லாம் தொழிலாளர் கையிலேயே இருந்து நடத்தப்பட்டு வருகிறது. இந்த உத்தியோகஸ்தரில் ஒருவர் விவசாயப் பரீக்ஷையில் தேரிய நிபுணர். மற்றொருவர் இச்சங்கத்தை ஸ்தாபித்த பெரியாராவர். இவர் ரவென்னு பிராந்திய முழுவதிலும் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் ஜனங்களை எல்லாம் முன்னேற்றத்திற்குக் கொண்டு வருவதென்ற எண்ணங்கொண்டு அக்கம்பக்கத்து கிராம ஜனங்கள் அனைவரையும் இச்சங்கத்தில் சேர்த்தார். ஆதியில் சொற்ப தொகையைக்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இச்சங்கம் தற்போது தன்னுடைய உபகார நிதியிலிருந்து மாதம் 1-க்கு 25 லயர்கள் விகிதம் வேலை செய்ய இயலாத விருத்தாப்பியர்களுக்கு உதவி நிதி அளித்து வருகிறது. பிடித்தமில்லாத நடவடிக்கையுள்ள வேலைக்காரர்களை சங்கத்திலிருந்து விலக்கி விடுவார்கள். அவர்களுக்கு ஏற்படும் தண்டனை இதைவிட எதுவும் பெரிதாக இருக்கமுடியாது. முன்னர் ஒரு சமயத்தில் ஒரு வேலைக்காரன் ஒரு விறகுக் கட்டை திருடிவிட்டு அவன் வேலையிலிருந்து நீக்கப்படும் தருவாயில் அவ்விறகுக் கட்டை திருப்பிக்கொடுத்து வேலையைக் காப்பாற்றிக் கொண்டான். ஆனால், அவன் செய்த குற்றத்திற்காக ஆறுமாத காலம் வரையில் வேலை கொடுக்கப்படாமல் சும்மா இருந்தான். இச்சங்கத்தில் சேர்ந்திருக்கும் எல்லா அங்கத்தினர்களுக்கும் எழுதப்படிக்கக் கற்றுக்கொடுக்கப்பட்டிருக்கிறது. தற்குறி எவரும் தற்காலத்தில் கிடையாது. இந்தியாவிலிருக்கும் சங்கங்களுக்கு இது ஒரு கற்பனையாகும்.

## தொழிற் சங்கங்கள்

வேலைச் சங்கங்கள் துவக்கப்பட்ட பத்து வருடங்களுக்குப் பின்னர் இத்தேசத்தில் தொழிற் சங்கங்கள் தோன்றின. இவ்விரு மாதிரி சங்கங்களிலும் நாளதுவரை வியாபாரம் வளர்ந்து கொண்டும், அங்கத்தினர்கள் பெருகிக்கொண்டும் நன்றாய் நடந்து வருகின்றன. இத்தொழில் சங்கங்களெல்லாம் தொழிலாளிகளும், முதலாளிகளும் சண்டை போட்டு வேலை நிறுத்தஞ் செய்ததின் பயனால் தோன்றின. இச்சங்கங்களுக்கு ஆதியில் தொழிற்கட்சியார் பண உதவி செய்து வந்திருக்கிறார்கள். ஆனால் வியாபார நிலையில் அவைகள் சுயேச்சையாய் இருக்கின்றன. இச்சங்கங்களை நடத்துவதில் தொழிலாளர்கள் மற்ற தேசங்களைப்போல சிலர் மட்டும் ஆரம்பித்து விருத்திக்கு வராமலின்றி எல்லா தொழிலாளர் பிரமுகர்களுடனும் கூடிக் கலந்து கொண்டு நடத்தி வருகிறார்கள். இம்மாதிரி சங்கங்கள் வட பாகத்தில் அதிகம். இவைகள் பலவித தொழில்கள் நடத்தி வருகின்றன. தைத்தொழில்கள் விசேஷமாய் விருத்தியாகி இருக்கின்றன.

## கண்ணாடி வேலைக்காரர்கள் சங்கம்

1903-ம் வருஷத்தில் கண்ணாடிக்காரர்கள் ஒன்றுகூடி வடதேசத்தில் ஒரு சங்கத்தை ஸ்தாபித்தார்கள். இவர்கள் முதலாளிகளுடன் சண்டை போட்டுக்கொண்டு வேலை நிறுத்தம் செய்ததே இதற்குக் காரணம். ஆனால், வெகு சீக்கிரத்தில் அவர்களுக்குள்ளிருந்த ஐக்கிய பாவத்தினாலும், சமரசத்தன்மையினாலும் ஒரு கட்டுப் பாடான ஏற்பாடாகிய இச்சங்கத்தை ஸ்தாபித்து அதில் ஒழுங்காய் நடப்பதற்கும், வியாபாரம் விருத்தியாவதற்கும், வழிகளைத்தேடிக்கொண்டு சங்கத்தை நன்கு நடத்தினார்கள். இச்சங்கத்தில் மட்டும் 1338 வேலைக்காரர்களும், பல் வேறு இடங்களில் கண்ணாடி உருக்குவதற்காக நான்கு பெரிய கொப்பரைகளும், இருந்தனவென்றால் இது எவ்வளவு விரிவாக நடந்துள்ளதென்பது தெரியவரும். மிலான் நகரில் தலைமை ஆபீசுடன் அங்கத்தினர்கள் கூடுவதற்காக பெரிய இடமும், வாசகசாலையும், கட்டப்பட்டிருக்கிறது.



## கூட்டுறவு அச்சுக்கூடம்

தொழிலாளருக்கும், அச்சுக்கூடத்தாருக்கும் ஏற்பட்ட மனஸ்தாபத்தின் நிமித்தம் பிரத்தியேகமாய் ஒரு கூட்டுறவு அச்சுக்கூடம் தோன்றலாயிற்று. 1900-ம் வருஷத்தில் இச்சங்கம் சரியானபடி வேலை துவக்கியது. மிலான் நகரிலுள்ள 3000 அச்சுக்கூடத் தொழிலாளர்களும் இதில் அங்கத்தினராய் சேர்ந்து கொண்டார்கள். 1907-ம் வருஷத்தில் இச்சங்கத்திற்கு சொந்தமாய் 1,16,000 லயர்கள் செலவழித்து கட்டிடம் கட்டப்பட்டது. நவீன முறையில் அச்சடிக்கும் யந்திரங்களும், கருவிகளும் வாங்கப்பட்டு நாகரீகமான வேலைகள் நடத்தப்பட்டது. 1918-ம் வருஷத்தில் இச்சங்கம் 54,44,044 லயர்களுக்கு வேலைசெய்தது.

## ஊன்றுகோல் வேலைக்காரர்கள் சங்கம்

இத்தொழிலாளர்கள் குறைந்த கூலிக்கு அதிக நேரம் வேலை செய்து முதலாளிகளிடம் வெகு நாள் அடிமைப்பட்டிருந்தார்கள். இத்தொழில் சுமார் 200, 300 வேலைக்காரர்களால் செய்யப்பட்டு இவை இரண்டு மூன்று பெரிய வியாபாரிகளிடமிருந்து வந்தது. இம்முதலாளிகளிடமிருந்து தப்பித்துக்கொள்ள ஒரு தொழிற் சங்கமும் ஏற்படுத்திக்கொண்டார்கள். ஆனால், தனியே இருந்து தொழில் செய்து கைத்தடிகளைத் தயாரித்த போதிலும் அவைகளை விற்பனை செய்ய வகை தெரியாததால் பழைய முதலாளிகளிடமே போகவேண்டி இருந்தது. இக்கஷ்டத்தைத் தவிர்த்துக் கொஞ்ச காலத்திற்குள் தாங்களே வியாபாரம் செய்யத் தலைப்பட்டு விட்டார்கள். இவர்களுக்கு வேண்டிய சாமான்களை சேகரித்து வைப்பதற்காக தனியே ஒரு கிடங்கு இருக்கிறது; அநேக வேலைக்காரர்கள் இருக்கின்றனர். அதன் காரணமாய் இவர்கள் வியாபாரமும் அடியில் கண்டபடி பெருகிக்கொண்டே வருகிறது :—

| | | |
|---|---|---|
| 1905-ஷ | 2,976 | லயர்கள் |
| 1910-ஷ | 15,118 | ,, |
| 1915-ஷ | 52,207 | ,, |
| 1918-ஷ | 2,26,376 | ,, |

## கூடை முடைபவர்கள் சங்கம்

கூடை முடையும் கைத்தொழில் ஓய்வு நேரங்களில் செய்யப்படும் வேலையாகும். கிராமவாசிகளும், நகரிலுள்ள தொழிலாளர்களும், முறையே மழை காலங்களிலும், வேலை இல்லாத நேரங்களிலும், கூடை முடைவது வழக்கம். அவர்கள் இதிலிருந்து சம்பாதித்த பணத்தை குடியில் செலவழித்தும், மற்றும் பல வீண் செலவுகள் செய்தும் வந்தார்கள். இம்மாதிரி பழக்கமுள்ளவர்களை ஒன்றாய் சேர்ப்பது அசாத்தியமான காரியம். இருப்பினும், அவர்களின் பழக்க வழக்கங்களை மாற்றுவதற்கு பல போதனைகள் செய்யப்பட்டு, அவர்களுக்கென ஒரு தொழிற்சங்கமும், பின்னர் ஒரு கூட்டுறவு சங்கமும் ஸ்தாபிக்கப்பட்டன. இப்பொழுது இக்கைத்தொழில் வலுவடைந்து ஏராளமான திரவியத்தையும், அநேக வேலைக்காரர்களையும், கொண்டு பெருகிய லாபத்துடன் வேலை செய்து வருகிறது. 1907-ம் ஆண்டில் 16,890 லயர்களுக்கு கூடை முடைந்ததிலிருந்து 1918-ம் வருஷத்தில் 1,21,380 லயர்களுக்கு கூடைகள் முடையப்பட்டன.

## மருந்துகள் செய்யும் சங்கம்

இச்சங்கங்கள் இத்தாலி தேசத்திற்கே விசேஷமானதாகும். 1890-ம் வருஷத்தில் மில்லான் நகரத்தில் சம்பள உத்தியோகஸ்தரின் பொதுச் சபையாரால் சுகாதார முறைப்படி மலிவாகவும், இலகுவாகவும், சாஸ்திரீயமாயும், மருந்துகள் செய்து விற்பதற்காக, ஒரு சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது. சில மாதங்களுக்குள் இச்சங்கத்தில் 694 அங்கத்தினர்களும், 80,000 லயர்கள் மூலதனமும் சேர்க்கப்பட்டது. இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டு 40 வருடங்கள் ஆகிறது. இதுபொழுது இச்சங்கம் மிலான் நகரத்தில் 13 மத்திய மருந்து விற்பனை சாலைகளும், லக்ஷக்கணக்கான ரூபாய் பெருமானமுள்ள கட்டிடங்களும், யந்திரக் கருவிகளும், உடைத்தாயிருக்கிறது.

(16-ம் பக்கம் பார்க்க)

# சர்வதேசத் தொழிலாளர் தினவிழா

## ரயில்வே தொழிலாளர் கூட்டம்

திரு. ஸி. டி. நாயகம் கர்ஜனை

மே-மீ 1-உ தென் இந்திய ரயில்வே தொழிலாளர் சங்கத்தின் ஆதரவில் பொன்மலையில் நடைபெற்ற சர்வ தேசத்தொழிலாளர் தினத்தன்று தலைமை வகித்த சென்னை மாஜி கூட்டுறவு டிப்டி ரிஜிஸ்திரார் திரு. வி. டி. நாயகம் அவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவின் ஓர் பகுதி பின்வருமாறு :—

தென் இந்திய இருப்புப் பாதைத் தொழிலாளர் சங்க உறுப்பினர்களே! தொழிலாளர் தோழர்களே!

தொழிலாளர் சங்கங்கள் ஆட்குறைப்புத் திட்டத்தையும், சம்பளக்குறைப்பையும் தடுத்து, வேலை நேரக் குறைவையும், சம்பளம், கல்வி, அறிவு, வாழ்க்கை, இவைகளின் உயர்வையும் பெரும்பாலும் முதலாளிகள் மூலமாகப்பெற உழைக்கின்றன. நமது முன்னேற்றத்திற்கு இந்த முயற்சி மாத்திரம் போதுமா, நாமாகவே நீக்கக்கூடிய குறைகள் நம்மிடம் எவையேனும் இருக்கின்றனவா, இருப்பின் அவை எவை, அவைகளை நீக்க வழி என்ன, முதலாளிகள் போன்ற வெளியார் உதவியன்றி நம்மை நாமே உயர்த்திக் கொள்வதற்கு வழிகள் இருக்கின்றனவா, இருந்தால் அவை எவை, அவைகளை

(17-ம் பக்கம் பார்க்க)

## ஐக்கிய இத்தாலி

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

இதற்காக ஒரு சோதனை சாலையுமுள்ளது. சில பிரத்தியேக மருந்துகளுக்கு தனி உரிமை பதிவு செய்யப்பட்டிருக்கிறது. வருடமொன்றுக்கு 90 லக்ஷம் லயர்களுக்கு வியாபாரம் நடக்கிறது. இச்சங்கத்தின் மற்றொரு நோக்கம் அதன் அங்கத்தினர்களுக்கு சுகாதாரம், தேக ஆரோக்கியம், இவைகளின் விதிகளைப்பற்றி பிரசுரங்கள் விடுத்தும், விளம்பரம் செய்வதுமாகும். 1908-ம் வருஷம் முதல் மிகப் பெயர்வாய்ந்த வைத்திய நிபுணர்களைக் கலந்துகொண்டு வைத்தியர்களுக்காக சிறந்த வைத்திய சாஸ்திர புத்தகம் ஒன்று வருஷா வருஷம் பிரசுரித்து வருகிறார்கள். மற்றும், இச்சங்கத்தார் சிசுபரிபாலனத்தைக் குறித்து மாதாந்திர சஞ்சிகை யொன்று வெளியிடுகிறார்கள். மில்லான் சங்கத்தாருடைய அரிய வேலைகளைப்போல் இத்தேசத்தில் மற்ற பாகங்களிலும் இதர சங்கத்தார்களால் வேலைகள் செய்யப்பட்டு வருகின்றது. ஔஷதங்கள் செய்யும் ஐக்கிய சங்கங்களை மூன்று வகையாகப் பிரிக்கலாம்:

1. மருந்துகள் விற்பனை செய்யும் கடைகளை நடத்துவதற்காக மருந்துகள் தயார் செய்யும் சங்கங்கள். இவை மிலான், பெர்காமோ, மாண்டுவா, பார்மா இவ்விடங்களில் பெரிதும் காணப்படும்.

2. ஒரே தொழிலைச் சேர்ந்திருக்கும் வேலைக்காரர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட சங்கம்.

3. சாதாரண கூட்டுறவு சங்கங்களின் கிளையாக இருந்து மருந்து செய்யும் சங்கங்கள். இந்த முறையில் டியூரின் நகரத்து கூட்டுறவு சங்கமும், ரோமா நகரத்து பால் சங்கமும் ஏழு மருந்துக் கடைகளை நடத்துகின்றன. ரோமா நகரத்துச் சங்கம் 75 லக்ஷம் லயர்களுக்கு மருந்து வியாபாரம் செய்திருக்கிறது.

ஜனங்களின் முக்யமான தேவைகளுக்கு கூட்டுறவு இயக்கம் எவ்வாறு உதவுமென்பது இச்சங்கங்கள் மூலம் தெரிகிறது. இம்மாதிரி இத்தாலி தேசமுழுவதும் பெரிதும் சிறிதுமான கைத்தொழில்களுக்கும், கூட்டுறவு சங்கங்கள் ஏற்பட்டு ஏராளமான வேலைகளும் வியாபாரமும் செய்து வருகிறார்களென்பது குறிப்பிடத்தகுந்தது.



இதுவரை ஏன் கையாளாதிருந்து விட்டோம், இனியேனும் கையாளலாமா, என்று இன்று உங்கள் முன் ஆராய விரும்புகிறேன்.

ஒவ்வொருவரும் தன் தன் காரியத்தைத் தான் தனியாகவாவது தன் இனத்தார்களுடன் சேர்ந்தாவது முடித்துக்கொள்வதுதான் சிறந்தவிதி. அவ்வாறு எவ்வளவுதூரம் நம் காரியங்களை நாமே செய்கிறோமோ அவ்வளவுதூரம் நம் உள்ளத்தில் ஓர்மையும், வெளியில் பெருமையும் உண்டு. நம்மாலாகக்கூடிய காரியத்திற்கு பிறரிடம் போய் கையேந்தி நிற்பது நமது திறமையை மடக்கி நமக்குக்குறைவு தேடிக் கொள்வதோடு நமது வேண்டுகோளை மறுப்பதற்கு அவர்களுக்கு வழி தேடிக்கொடுத்ததுமாகும்.

நம்மாலாகக்கூடியதை எல்லாம் நாம் செய்து விட்டு நமக்கு மிஞ்சியதையும் நாமே செய்ய வழி தேட முயன்றால் நாம் கேட்காமலே நமக்கு உதவி செய்யப் போட்டி போட்டுக்கொண்டு வருவார்கள். ஆகையால் நம்மாலாகக்கூடிய காரியத்தை எல்லாம் நாம் ஒவ்வொருவரும் தனித்தோ நம் இனத்தாருடன் சேர்ந்தோ செய்து முடிப்பதையே நம்முடைய முதற் கடமையாக வைத்துக் கொள்ளவேண்டும்.

மக்களுள் உழையாதவர்கள் கிடையாது. உழையாதவர்களுக்கு உணவு கிடையாது. உழைத்தும் பெற்ற பலனை அப்பொழுதே அழித்து விடுவோரும், அப்பலனில் ஒரு பாகத்தை செலவு செய்து மீதத்தை சேமித்து வைப்போருமாக மக்கள் இருதரத்தவர்கள் ஆவார்கள். சேமித்து வைத்தவர்கள் நாளடைவில் முதலாளிகளாகிப் பணத்தில் உயர்ந்து பண உதவியால் வாழ்க்கை, ஆட்சி முதலிய துறைகளிலும் உயர்ந்து, உழைப்பின் பயனை அவ்வப்போது செலவு செய்து, சேமித்து வையாத பெருமக்களை ஆளும் நிலைமைக்கு வருகிறார்கள். ஒருகாலத்தில் உழைத்தவர்கள் தங்கள் உணவு முதலியவைகளுக்குத் தாங்களே உழைக்கவேண்டிய அவசியமின்றிப் பிறரை உழைக்க ஏவித் தங்களுக்கு வேண்டிய உணவு முதலியவைகளைப் பெற்றுக் கொள்ளும் நிலைமைக்கு வருகிறார்கள். உழைத்தே உணவு முதலியவைகளைத்தேட வேண்டிய நிலைமையில் இருப்பவர்கள் தங்களுக்கும், உணவு முதலியவைகளுக்காக உழைக்கவேண்டாத மற்றவர்களுக்கும் சேர்த்து உழைக்கவேண்டியவர்களாகிறார்கள். இதுவே தொழிலாளர்களுக்கு ஏற்பட்டுள்ள பல சங்கடங்களுக்கும் காரணம். சேமிப்புத்திறமை இன்மையே மக்களுள் ஒருவர் மற்றவரைவிட உயர்வு பெறுவதற்கு ஒரு பெரும் முதற்காரணம். சேமிக்க முந்தியவர் பிந்தியவர்கள் மேல் பெரும் பளுவாயிருப்பதை விலக்குவதற்கும் அது உடனே முடியாவிட்டால் முடியும்வரைப் பளுவைக்கூடியவரை குறைத்துக் கொள்வதற்கும் ஆர்வத்துடன் விரும்புகிறவர்கள் சேமிப்பு வழக்கத்தைக் கைக்கொள்வதுதான் அவர்கள் செய்யவேண்டிய நேர்மையான முதல் வேலையாகும்.

சேமிப்புக்கு எளிதாகக் கையாளக்கூடிய இரண்டு வழிகள் உண்டு. ஒன்றுதான் இதுவரை வழக்கப்பட்டிருக்கும் அல்லது விரும்பும் செலவுக்கு மேலான வரும்படி தேடுவது. இன்னொன்று தனக்குத் திட்டமாக ஏற்பட்ட வரும்படிக்குக் குறைவாகச் செலவைச் சுருக்கிக் கொள்வது. முந்தியதை விடப்பிந்தியது பெரிதும் எளிதானது. முந்தியதற்குப் பிறர்கையை எதிர் பார்க்கவேண்டும். தன்னில் புறம்பான பல காரணங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். பிந்தியதற்குத் தனக்குத்தானே அடங்கிக்கொண்டால் போதுமானது; வேறொருவரையும் எதிர்நோக்க வேண்டியதில்லை; தான் வழக்கப்பட்டிருக்கும் அல்லது விரும்பும் செலவு என்பதற்கு ஒரு எல்லை கிடையாது. தண்ணீர் உயர உயரத் தண்ணீரில் மிதக்கும் கட்டையும் மிதக்கிற மாதிரி வரும்படி உயர உயர வழக்கம் விரிந்து கொண்டும் விருப்பம் பெருகிக்கொண்டும் போகும். செலவுக்குத் தக்கவரும்படி தேடுவதில் நம்முடைய தாழ்ந்த குணத்திற்கு நாம் ஆளாகி நம் அறிவைச் சிதற விட்டவர்களாகிறோம். வரும்படிக்குத் தக்க செலவைச் சுருக்குவதில் தாழ்ந்தகுணங்களை அடக்கியாளுந் திறனும் அறிவும் பெற்று உயர்கிறோம். ஆகையால் பிறர்கையை எதிர் பார்க்கும் வழக்கத்தை ஒழித்து வரும்படிக்குத் தக்கவாறு செலவைச் சுருக்கி நம்மை நாமே அடக்கி அறிவைப் பெருக்கும் வழக்கத்தில் உரம் பெறுவது நமது கடமையாகும்.

செலவைச் சுருக்க நோக்கங்கொண்டவர்கள் தான் காணும் ஒவ்வொரு செலவையும் நிறுத்த முடியாதா என்ற அளவால் அளந்து பார்க்க வேண்டும். பிறர் மெச்ச வேண்டியதற்காகவோ நம் முன்னோர்கள் செய்து வந்தார்கள் என்பதற்காகவோ, நாமே இதுவரை செய்து வந்தோம் என்பதற்காகவோ, நமக்கு விருப்பம் இருக்கின்றதென்பதற்காகவோ, அலசிப்பாராமல் செலவு செய்வது அறிவுடைமைக்குரிய தாகாது. நம்முடைய சடங்குச் செலவுகளெல்லாம் மேலே சொன்ன இனத்தைச் சேர்ந்தவைதான்.

சடங்கு முதலிய செலவுக்கு அடுத்து மக்கள் கடன்பட்டுக் கொடுக்கும் வட்டிச் செலவுக்கும் தொழிற்சாலைத் தொழிலாலர்கள் கடன்படுவதற்கு நியாயமேகிடையாது. பயிர்தொழில்செய்கிறவர்கள் கிணறுவெட்டவோ, விதைவாங்கவோ எதிர்பார்த்த அறுவடை வாராததாலோ கடன்பட இடமுண்டு. வியாபாரம் செய்கிறவர்கள் வியாபாரத்துக்கு முதல் முடக்கத்தை நீக்க கடன்வாங்க காரணமுண்டு. தொழிற்சாலைத் தொழிலாளிகள், அதிலும் குறிப்பிட்ட நாளில் திட்டமான தொகையை சம்பளமாகவாங்கும் இருப்புப்பாதைத் தொழிலாளிகள் போன்றோர் கடன்படுவதற்கு இடமே இருக்கக்கூடாது. ஒரு மாதச் சம்பளவரும்படி ஏறக்குறைய இவ்வளவு என்பது அவர்களுக்கு முன்னமே தெரியும். மாதவரும்படிக்குள் செலவைத்திட்டப்படுத்தி சுருக்கிக்கொள்ளவேண்டியது அவர்கள் கடமை. இந்நிலைமையில் அவர்கள் கடனாளி ஆகக்காரணம் என்ன? செலவை ஒழுங்குபடுத்த இரண்டொருமாதம் தாழ்த்தலாம். நீடித்தகாலமாக வருவாய்க்குமேல் செலவு செய்து கடன்படுவதென்றால் கடனைத் தீர்ப்பதற்கு ஒரு வழியுமின்றி கண்மூடித்தனமாகக் கடன் பட்டுக்கொண்டு போகிறார்களென்று நினைக்க இடமாகிறது. அல்லது ஊரிலுள்ள நில வரும்படி போன்ற திட்டமில்லாத வேறு வரும்படியிலிருந்து கடனைத்தீர்த்து விடலாமென்று நம்பி கடன் பட்டதுபோலாகிறது. இரண்டில் எது காரணமாயிருந்தாலும் அது நன் மாதிரியல்ல என்றே சொல்லவேண்டும். இன்னும் சிலர் நல்ல விலை வரும்பொழுது நிலங்களை விற்று கடனைக் கட்டி விடலாம் என எண்ணிக் கடன் வாங்கினதாகச் சொல்லுகிறார்கள். இதுவும் சரியான மாதிரியல்ல. நிலங்களின் விலை கூடுமென்பது உறுதியல்ல. தற்போதுள்ள கால நிலையில் குறையும் என்பது உறுதி. வட்டிமாத்திரம் நாள்தோறும் கூடும் என்பது உறுதி. விலை கூடுவது உறுதியில்லாததாக இருக்க அதனை நம்பி உறுதியாகக்கூடிய வட்டிக்கடனை வாங்குவது சற்றேனும் அறிவுடைமையாகாது. அந்நிலையில் சொத்தை வந்தவிலைக்கு விற்றுக் கடனைத் தீர்த்து விட்டு மீதத்தைத் தொழிலாளருக்கு பொருத்தமான வழியில் சேமித்து வைப்பதுதான் சிறந்தமாதிரியாகும். தொழிலாளர் தங்கள் நிலைக்குத்தக்கவாறு சிறு தொகைகள் கடன் வாங்க நேரிட்டாலும் இருப்புப்பாதை முதலாளிகளிடமிருந்து பிராவிடண்டு பணத்திலிருந்தாவது கூட்டுறவு சங்கங்களிலிருந்தாவது குறைந்தவட்டிக்குக் கடன் வாங்கவேண்டுமேயொழிய வெளியே ஏறியவட்டிக்குக் கடன் வாங்குவதை நீக்கவேண்டும்.

சடங்குச் செலவு, வட்டிச் செலவு போலவே இன்னொரு பெருஞ் செலவு நகைக்கும் உடைக்கும் பணத்தை விரயப்படுத்துவது. நகையில் முடக்கியிருக்கிற தொகையை வரும்படி தாக்கூடிய ஒரு இனத்தில் போட்டு வைத்திருந்தால் அதிலிருந்து வரக்கூடிய வரும்படி ஒரு கணிசமான தொகையாயிருக்கும். அதை இழப்பது ஒரு புறம். நகை செய்வதில் இழக்கும் பொடிக்கூட்டு, தேய்வு, களவு, கூலி, இவைகள் ஒரு புறம். நகை அணிந்திருப்பதில் தேய்வு, திருட்டு, திருட்டைத் தடுக்க முயல்வதில் செலவு, இவைகள் ஒரு புறம். காலத்துக்குத் தக்கபடி நகைகளை அழித்து புது நகைகள் செய்வதில் அழிவு, கூலி, இவைகள் ஒரு புறம். இவ்வாறு நகையால் நம்முடைய வரும்படியும் சேமிப்பும் வீணில் அழிவதை நாம் தடுக்காமலிருப்பது சரியல்ல. பெண்டிர்கள் நகையை விரும்புவார்கள் என்று சொல்வதும் சரியல்ல. பெண்டிர்கள் தங்களுக்கெனத் தனிச்சொத்து இருக்க வேண்டுமென்று விரும்புகின்றார்கள் என்பதே உண்மை. தனிச் சொத்தாக வைத்திருப்பதற்கு வேறு வழி இல்லாதபடியால் இவ்வளவு இக்கட்டுக்கும் உட்பட்டாவது நகைச் சொத்து வைத்துக்கொள்ள விரும்புகிறார்கள்.

ஐக்கிய அரசு

வரும்படி வரக்கூடிய, பிறர் அபகரிக்க இடமில்லாத, வேறு சொத்துக்கு இடமிருந்தால் அதை அவர்கள் விருப்பத்துடன் ஏற்றுப் போற்றி வைத்துக் கொள்ளுவார்கள். பொருளை வீணாக்குவதைத் தடுக்க விரும்புவோர் இதையும் கருத்துள் வைத்துத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டுமென்பது எனது கோறிக்கை.

பெருங்குடியாகிய கள், சாராயம் முதலியவைகளிலும், பெரும் போதைப் பொருளாகிய அபின், கஞ்சா முதலியவைகளிலும், செலவிட்டு உடலையுங் கெடுத்து, நடமாடும் இடத்தையும் அருவருப்புக்குள்ளாக்கி வீணாக்கும் பொருள் எவ்வளவென்று பாருங்கள். இவ்விதம் பெரும் வீண் செலவுகளுக்கு அடிமைப்பட்ட நமது மனப்பான்மையில் நம்மை அறியாமலே தடுக்கக்கூடிய பல்வேறு சிறு செலவுகளுக்கு நாம் ஆளாகிறோம். அவைகள் எல்லாம் ஒருங்கு திரண்டு பெருந்தொகையாகும். இவைகளை வீண்போகாமல் காக்காமல் நமக்கு வரும்படி போதாதென்று சொல்வதை உண்மையுணர்வார் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். நம்முடைய முறைப்பாட்டுக்கு காது கொடுக்கவு மாட்டார்கள். உள்ளவனுக்கு இன்னுங் கொடுக்கப்படும் என்பது ஒரு முதுமொழி. அதாவது தனக்குக் கிடைத்ததை வீணாக்காமல் காப்பாற்றுகிறவனுக்கு இன்னும் கொடுக்கப்படும். ஒரு குழந்தைக்கு ஒரு சாமான் வாங்கிக்கொடுத்தால் அதை அது கெடுத்து விடாமல் வைத்திருந்தால் அது கேட்காமலே மறு சாமான் வாங்கிக் கொடுக்க நமக்கு விருப்பம் வரும். முதலிற் கொடுத்த சாமானைக் கெடுத்து விட்ட பிள்ளைக்குப் பின்னொரு சாமான் அது கேட்டாலும் வாங்கிக்கொடுக்க மனம்வராது. அதே போன்று நாம் பெறுகிற வரும்படியில் மேலே சொன்ன வீண் செலவுகளை எல்லாம் நீக்கி நல்வழிச் செலவு செய்து மீதத்தை சேமித்து வந்தோமானால் நாம் வாய் விட்டுக் கேட்காமலே மனம்போல் வாழ்வு என்ற சொற்படி புது வரும்படி பெருகிக்கொண்டே இருக்கும்.

மேலே சொன்ன அளவு குற்றமுள்ளவையல்ல வாயினும், நமது பணச் சேமிப்புக்கு இடையூருள்ள இன்னும் சில வழக்கங்களும் நம்மிடம் இருக்கின்றன. நம்முடைய குடும்பச் செலவுக்கு வேண்டிய கடை சாமான்களை ஒவ்வொருவரும் தனித்தனியே வாங்குவதை விடப் பலர் கூட்டாகச் சேர்ந்து சாமான்களை வாங்கிப் பிரித்துக்கொள்வது நமது செலவுகளைக் குறைக்க ஒரு நல்வழி. கூட்டுறவுப் பண்டகசாலை போலவே கூட்டுறவு சாப்பாட்டு விடுதியும் ஏற்படுத்தலாம். செலவைக் குறைப்பதற்கு அது இன்னும் சிறந்த ஓர் வழியாகும். செலவு குறைவது மாத்திரமல்ல, நேரமும் மீதப்பட்டு நேரத்தை வருவாய் வரக்கூடிய ஒரு வழியிலோ கல்வி, அறிவு, இவைகளைப் பெருக்கும் வழியிலோ செலவு செய்யலாம்.

ஜப்பானியர் தங்கள் துணிகளைப் பெரிதுங் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதற்கு ஒரு காரணம் ஆலைத்தொழிலாளர்கள் எல்லாரும் ஆலையிலேயே ஒன்றாகச் செலவு செய்து சாப்பிட்டு அதனால் செலவைக் குறைத்துக்கொண்டது என டில்லி சட்ட சபையில் ஒருவர் சொன்னார். இதை உடனே எல்லாரும் ஒன்றாகத் துவக்காவிட்டாலும் ஒன்றாகச் சாப்பிடப் பழக்கப்பட்ட சிலர் அல்லது பலர் கூடிச்செய்து நன்மை அடையலாம்.

இவ்வாறு பல வழிகளில் சேமித்த பொருளை உங்கள் இருப்புப்பாதை கூட்டுறவு சங்கத்தில் சேமிப்புத் தொகையாகவாவது, அல்லது தபாலாபீஸ் சேமிப்புக் கணக்கிலாவது, மாதந்தோறும் போட்டுவருவது தொழிலாளருக்கு ஏற்ற சிறந்த வழியாகும். கண்ட இடங்களிலெல்லாம் சீட்டுப்போடுவதும், கடன் கொடுப்பதும், தொழிலாளருக்குப் பெரும்பாலும் கேட்டை விளைவிப்பதே யாகும். தொழிலாளர் சங்கத்தார் உறுப்பினர்களை எல்லாம் மாதம் ரூபாய் ஒன்றுவது (நாள் ஒன்றுக்கு அரை அணா ஆகிறது) இவ்வாறு சேமிக்கக் கட்டாயப்படுத்தி ஆண்டு தோறும் ஒவ்வொரு உறுப்பினர் கணக்கிலும் எவ்வளவு சேமிக்கப்பட்டிருக்கிறதென்பதையும் ஆண்டு நிறைவுக் கணக்கிற் காட்டி ஊக்கப்படுத்த வேண்டும்.

இப்படிச் சேர்ந்த வரும்படி கணிசமான ஒரு தொகையாகச் சேர்ந்தவுடன் அதை உங்கள் இருப்புப்பாதைப் பங்கிலாவது அதன் கடனிலாவது போட்டு வைப்பது சிறந்தவழியாகும்.

உங்கள் இருப்புப்பாதைப் பங்குத்தொகைக்கு 100-க்கு $3\frac{1}{2}$ விகிதம் வட்டி கொடுப்பதாக அரசாட்சியார் பொறுப்பேற்றிருக்கிறார்கள். சென்ற பல ஆண்டுகளாக அந்தப் பங்குத் தொகைக்கு 100-க்கு 8 விகிதம் ஈவுத்தொகை கிடைத்துக்கொண்டு வந்திருக்கிறது. நாம் போட்டி போட்டுக்கொண்டு நாம் பணத்தைக் கொட்டி வாங்கிற நிலச்சொத்திலிருந்து மேலே கண்டபடி சர்க்கார் பொறுப்பேற்றிருக்கிற $3\frac{1}{2}$ வட்டிகூட பெரும்பாலான நிலத்தில் தேறாது. நிலத்தில் 8 வட்டி கிடைப்பது அருமையிலும் அருமை. நிலத்தில் வரும்படி கிடைக்கும்படிச் செய்து அதை வீடு கொண்டு சேர்ப்பதில் இருக்கிற சங்கடங்கள் எவையேனும் இருப்புப் பாதைப் பங்குச்சொத்து வரும்படியில் கிடையா. எந்த நிலத்திலும் வரக்கூடிய வரும்படிக்கு இருப்புப்பாதைப் பங்குச் சொத்துக்கு இருப்பது போன்று அரசாட்சியார் பொறுப்புக் கிடையாது. தென் இந்திய இருப்புப்பாதையை நடத்தும் உரிமையும் பொறுப்பும் கூட்டாகச் சேர்ந்த சில முதலாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் விடுமுதல் பங்கு 1-க்கு 10 பவுன் வீதம் லக்ஷம் பங்குகளுடைய பத்து லக்ஷம் பவுன் ஆகும். இலாபத்திலிருந்து எடுத்து ஒதுக்கி வைக்கப்பட்ட பணமும் சேர்ந்திருக்கிறபடியால், துவக்கத்தில் பத்துப்பவுன் விலையுள்ள ஒரு பங்கு இப்பொழுது விலையில் உரியபடி கூடியிருக்கும் சொற்ப விலைக்கு ஒரு நிலத்தை வாங்கி அதில் வந்த வரும்படியிலிருந்து அந்த நிலத்தில் சில மாங்கன்றுகள் வைத்து ஒரு கிணறும் தோண்டினால் எப்படி அந்த நிலத்தின் விலை கூடுமோ அதே மாதிரி இப்பங்குகளின் விலையும் கூடி இருக்கின்றன. இதைத்தவிர இந்த இருப்புப்பாதையில் நூற்றுக்கு 4, $4\frac{1}{2}$, 5 வட்டிகளில் $4\frac{1}{2}$ லக்ஷம் பவுன் கடன் பத்திரங்களும் வெளியிட்டிருக்கிறார்கள். அவைகளிலும் அவரவர்கள் நிலைமைக்குத் தக்கபடி பணம் போட்டு வைக்கலாம். இத்துடன் பத்திரங்களுக்கும் அரசாட்சியார் பொறுப்பேற்றிருக்கிறார்கள். தொழிலாளிகளுக்கு நிலச்சொத்தைவிட இது சிறந்த சொத்தாகும். இதை எப்பொழுது வேண்டுமானாலும் எளிதில் வாங்கவும் விற்கவும் போதிய வசதிகளிருக்கின்றன. இப்படிச் செய்வதால் முதலாளிகள் தொழிலாளிகள் என்ற வேற்றுமை நீங்கி, ஒருவருக்கொருவர் உள்ள ஒற்றுமை உயர இடமாகும். இவ்வேற்பாட்டை இருப்புப்பாதையில் பங்குள்ள முதலாளிமார்களெல்லாம் விருப்பத்துடன் வரவேற்பார்கள். உங்கள் இருப்புப்பாதையில் வேலை பார்ப்பவர்கள் எல்லாரும் சேர்ந்து 35,000. உங்கள் சேமிப்பை எல்லாம் இருப்புப்பாதைப் பங்கு அல்லது கடன் பத்திரச்சொத்தாக மாற்ற உங்கள் இருப்புப்பாதையிலேயே வேண்டிய இடமிருக்கிறது. ஏதாவது காரணத்தால் தென் இந்தியா இருப்புப்பாதைப் பங்குகள் கிடைக்காவிட்டால், வேறு இருப்புப்பாதைப் பங்குகளிலாவது, சுரங்கப் பங்குகளிலாவது, ஆலைப்பங்குகளிலாவது தபாலாபீசிலாவது, கணிசமாகத் திரண்ட தங்கள் சேமிப்பைப் போட்டுவைப்பது தான் தொழிலாளருக்குச் சிறந்த சொத்தாகும். நீங்கள் நிலச்சொத்தை வாங்குவது உங்களை விடக்குறைந்த வரும்படியுள்ள பயிர்த்தொழிலாளிகளின் வரும்படியைப் பங்கிடப்போனதாகும். நீங்கள் உங்கள் தொழிற் சொத்தை உடையவர்களாக வேண்டுமென்று விரும்புவது போல், பயிர்த்தொழிலாளர்களையும் அவர்கள் தொழிற் செய்யும் நிலச்சொத்தை உடையவர்களாகத் தூண்டுவது நீங்கள் அவர்களுக்கும் உங்களுக்கும் நாட்டிற்கும் செய்யும் நற்றொண்டாகும். அவர்களுடன் போட்டி போட்டு அந்நிலங்களை வாங்க முயல்வது நன்றன்று. உங்கள் தற்காலத் தொழிலைவிட்டு விட்டுப் பயிர்த் தொழில் செய்ய நினைக்கும்பொழுது நீங்கள் பயிர் நிலங்களை விலைக்கு வாங்கலாம். அதுவரையில் உங்கள் சொத்து உங்கள் தொழிலிலேயே இருப்பதுதான் நன்முறையாகும்.

148729.